| 361. | 2010 | 25 | 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம். |
| 362. | 2010 | 28 | 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 363. | 2010 | 33 | 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றுதல்) திருத்தச் சட்டம். |
| 364. | 2010 | 34 | 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம். |
| 365. | 2011 | 20 | 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டம். |
| 366. | 2012 | 6 | 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம். |
| 367. | 2012 | 26 | 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டம். |
| 368. | 2012 | 31 | 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவு ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 369. | 2012 | 32 | 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம். |
| 370. | 2012 | 42 | 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டம். |

| வ.எண். | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 371. | 2012 | 43 | 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம். |
| 372. | 2012 | 51 | 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 373. | 2013 | 1 | 2013 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம். |
| 374. | 2013 | 26 | 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டம். |
| 375. | 2014 | 1 | 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு (திருத்தச்) சட்டம். |
| 376. | 2014 | 14 | 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம். |
| 377. | 2014 | 25 | 2014 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம். |
| 378. | 2015 | 1 | 2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்தில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். |
| 379. | 2016 | 1 | 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச்(திருத்த) சட்டம். |
| 380. | 2016 | 10 | 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 381. | 2016 | 16 | 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம். |
| 382. | 2017 | 3 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம். |
| 383. | 2017 | 6 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச்(திருத்த) சட்டம். |
| 384. | 2017 | 7 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையம் (திருத்தச்) சட்டம். |
| 385. | 2017 | 8 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம். |
| 386. | 2017 | 22 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 387. | 2017 | 24 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம். |
| 388. | 2017 | 25 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறை) இரண்டாம் திருத்தச் சட்டம். |
| 389. | 2017 | 44 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம். |
| 390. | 2017 | 45 | 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம். |
| 391. | 2018 | 3 | 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம். |
| 392. | 2018 | 11 | 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம். |
| 393. | 2018 | 13 | 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டம். |

| வ.எண். | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 394. | 2018 | 17 | 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம். |
| 395. | 2018 | 18 | 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்தச்) சட்டம். |
| 396. | 2018 | 21 | 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 397. | 2018 | 24 | 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டம். |
| 398. | 2018 | 35 | 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டம். |
| 399. | 2018 | 38 | 2018 தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்தல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம். |
| 400. | 2018 | 45 | 2018 ஆம் ஆண்டு சென்னை நகர உரிமையியல் நீதிமன்றம் (திருத்தச்) சட்டம். |
| 401. | 2019 | 2 | 2019 தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்தல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம். |
| 402. | 2019 | 5 | 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள்(திருத்தச்) சட்டம். |
| 403. | 2019 | 9 | 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லுரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம். |
| 404. | 2019 | 13 | 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 405. | 2019 | 15 | 2019ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டம். |
| 406. | 2019 | 20 | 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டம். |
| 407. | 2019 | 25 | 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 408. | 2020 | 2 | 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம். |
| 409. | 2020 | 7 | 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம். |
| 410. | 2020 | 8 | 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 411. | 2020 | 13 | 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்தச்) சட்டம். |
| 412. | 2020 | 17 | 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 413. | 2020 | 19 | 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 414. | 2020 | 30 | 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச்(திருத்த) சட்டம். |
| 415. | 2020 | 31 | 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டம். |

**நோக்கக் காரண விளக்கவுரை.**

தமிழ்நாடு மாநில சட்ட ஆணையமானது, கூறப்பட்ட தனது பல்வேறு அறிக்கைகளில் காலாவதியான மற்றும் தேவையற்ற பல்வேறு திருத்தச் சட்டங்களை நீக்கறவு செய்ய பரிந்துரை செய்துள்ளது. அரசானது, மாநில சட்ட ஆணையத்தின் மேற்கண்ட பரிந்துரைகளை தொடர்புடைய நிருவாக துறைகளுடன் கலந்தாலோசனை செய்து கருத்தில் கொண்டு சட்டமுன்வடிவின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலாவதியான மற்றும் தேவையற்ற திருத்தச் சட்டங்களை நீக்கறவு செய்ய முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**துரைமுருகன்,**
*நீர்வளத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2026 ஜனவரி 23.

**கி. சீனிவாசன்,**
*முதன்மைச் செயலாளர்.*

2026—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130-ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/2026**

# 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையச் சட்டமுன்வடிவு.

## அத்தியாயம் – I
## முன்னுரை

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.
2. பொருள் வரையறைகள்.

## அத்தியாயம் – II
## சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்

3. சிறப்பு மேம்பாட்டுப் பகுதியினை விளம்புகை செய்தல்.
4. சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம்.
5. ஆணையத்தின் கூட்டங்கள்.
6. ஆணையத்தில் உள்ள காலிப் பணியிடம் முதலியவைகள், நடவடிக்கைகளைச் செல்லாததாக்காது.
7. ஆணையத்தின் அலுவலர்களும் ஊழியர்களும்.
8. ஆணையமானது திட்டமிடல் அதிகார அமைப்பாக இருத்தல்.
9. ஆணையத்தின் செயற்பணிகள்.
10. ஆணையத்தின் அதிகாரங்கள்.
11. சிறப்பு நோக்க நிறுவனத்திற்கு ஆணையத்தின் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் ஒப்படைவு செய்தல்.
12. ஆணையத்தின் பணிப்புரைகள்.

## அத்தியாயம் – III
## மாநில அளவிலான வழிகாட்டுக் குழு மற்றும் சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் ஆலோசனைக் குழு

13. மாநில அளவிலான வழிகாட்டுக் குழுவினை அமைத்தல்.
14. மாநிலக் குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்.
15. மாநிலக் குழுவின் கூட்டங்கள்.
16. சிறப்பு மேம்பாட்டுப் பகுதி ஆலோசனைக் குழு.

## அத்தியாயம் – IV
## சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் மற்றும் விரிவான மேம்பாட்டுத் திட்டம்

17. சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம்
18. தகுதிவாய்ந்த திட்டமிடல் ஆணையத்திற்கு பணிப்புரைகள் வழங்குதல்
19. சிறப்புப் பகுதி முதன்மைத்திட்டம் தயாரிப்பது குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கான அரசின் ஒப்புதல்
20. சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் தயாரிப்பது குறித்த அறிவிப்பு
21. சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்திற்கான ஒப்புதல்

22. சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் நடைமுறைக்கு வருதல்

23. விரிவான மேம்பாட்டுத் திட்டம்

24. விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் தயாரிப்பு குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கான அரசின் ஒப்புதல்

25. விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் தயாரிப்பு குறித்த அறிவிப்பு

26. விரிவான மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்

27. விரிவான மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைக்கு வருதல்

28. சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் மற்றும் விரிவான மேம்பாட்டுத் திட்டத்தில் மாற்றம் செய்தல் மற்றும் இரத்து செய்தல்

**அத்தியாயம் – V**

**நிலம் கையகப்படுத்தல் மற்றும் ஒப்படைப்பு**

29. மேம்பாட்டிற்குத் தேவையான நிலம், பொது நோக்கத்திற்குத் தேவையான நிலமாகக் கருதப்படுதல்

30. திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களை வாங்குதலுக்கான அல்லது கையகப்படுத்தலுக்கான அதிகாரம்

31. நிலத்தின் மீதான உரிமைகள் மற்றும் நலன்களை ஒப்பந்தத்தின் மூலம் கையகப்படுத்துதல்

32. நிலத்தை விடுவித்தல்

33. நிலச் சேர்ம பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**அத்தியாயம் – VI**

**சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் வளர்ச்சி, கட்டுப்பாடு மற்றும் நிலத்தின் பயன்பாடு**

34. நிலத்தின் பயன்பாடும் மேம்பாடும் திட்டங்களுக்கு இணக்கமாக இருத்தல்

35. மாநில அரசு எதனின் அல்லது மைய அரசின் அல்லது உள்ளாட்சி அமைப்பு எதனின் சார்பாக மேற்கொள்ளப்படும் வளர்ச்சி

36. வளர்ச்சிக்கான அனுமதி கோரும் விண்ணப்பம்

37. வளர்ச்சிக்கான விண்ணப்பத்தை வழங்குதல் அல்லது மறுத்தல்

38. அனுமதி வழங்க மறுத்தலின் மீதான மேல்முறையீடு

39. சிறப்பு மேம்பாடு பகுதியிலுள்ள நிலங்கள் மற்றும் கட்டடங்கள் மீதான கட்டுப்பாடு

40. அங்கீகாரமற்ற வளர்ச்சியின் தேவைப்படலாகும் அகற்றுதலுக்குள்ள அதிகாரம்

41. அங்கீகாரமற்ற வளர்ச்சியை நிறுத்துவதற்கான அதிகாரம்

42. பூட்டி, முத்திரை வைப்பதற்கு எதிரான மேல்முறையீடு

43. ஏற்பட்ட செலவுகளை வசூலித்தல்

44. சிறப்பு வசதியை வழங்குவதற்கான அல்லது மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான ஆணையத்தின் அதிகாரம்

45. சிறப்பு மேம்பாட்டுக் கட்டணம்

46. சிறப்பு மேம்பாட்டுக் கட்டணங்களைத் தாமதமாகச் செலுத்துவதற்கான அபராத வட்டி

**அத்தியாயம் – VII**

**குற்றங்களும் தண்டத்தொகைகளும்**

47. குற்றங்களுக்கான தண்டனை

48. சட்டத்தின் வகைமுறைகளை மீறியதற்கான தண்டத்தொகை

49. தீர்ப்பளித்தல்

50. மேல்முறையீடு

51. வசூலித்தல்

52. நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்

53. நிறுமங்களால் செய்யப்படும் மீறுகைகள்

54. குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்

## அத்தியாயம் – VIII
## நிதி, கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை

55. ஆணையத்தின் நிதியம்

56. மானியங்கள், முன்தொகைகள், கடன்கள் மற்றும் முதலீடுகள்

57. ஆணையத்தின் வரவு செலவுத் திட்டம்

58. செலவினங்களை மேற்கொள்வதற்கு ஆணையத்தின் அதிகாரம்

59. கணக்குகளும் தணிக்கையும்

60. ஆண்டறிக்கை

## அத்தியாயம் – IX
## பல்வகைப்பட்டவை

61. அதிகாரங்களின் ஒப்படைவு

62. அரசின் கட்டுப்பாடு

63. உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள், பொதுப் பணியாளர்களாகக் கருதப்படுதல்

64. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு

65. விளக்க அறிக்கைகள் மற்றும் ஆய்வுகள்

66. நுழைவிற்கான அதிகாரம்

67. அறிவிப்பைச் சார்வுசெய்தல்

68. பொது அறிவிப்பு எவ்வாறு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பது

69. ஆணைகள் மற்றும் ஆவணங்கள் உறுதிச் சான்றளிக்கப்படுதல்

70. ஆணையத்தைக் கலைத்தல்

71. உரிமையியல் அதிகார வரம்பிற்குத் தடை

72. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்

73. ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்

74. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்

75. பிற சட்டங்களின் பொருந்துகை தடைப்படாது

76. இந்தச் சட்டத்தின் மீதூர்ந்து இயங்கும் விளைவு

77. காப்புரை

**தமிழ்நாடு மாநிலத்தில் ஒரு சிறப்பான முறையில் அவற்றின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கு, சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளை விளம்புகை செய்வதற்கானதும் அத்தகைய பகுதிகளின் முழுமையான, திட்டமிடப்பட்ட, ஒருங்கிணைந்த மற்றும் நிலையான வளர்ச்சிக்குச் சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையங்களை உருவாக்குவதற்குமானதும், மற்றும் அது தொடர்புடைய அல்லது சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்குமானதொரு சட்ட முன்வடிவு.**

சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளை விளம்புகை செய்வது திட்டமிடப்பட்ட மற்றும் நிலையான வளர்ச்சிக்குச் சிறப்புப் பகுதி ஆணையங்களை நிறுவுவது அத்தகைய பகுதிகளின் சிறப்பியல்பிற்கு ஏற்றவாறு வகை செய்வது மற்றும் அத்தகைய பகுதிகளின், சுற்றுச்சூழலியல் பொறுப்பு மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை, உள்ளார்ந்து உறுதிசெய்வதாக்க உள்நாட்டுத் தேவையுடன் இணக்கமாயிருப்பதும் தவிர்க்க முடியாது என்பதாலும்,

மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில் சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளின் முழுமையான, திட்டமிடப்பட்ட, ஒருங்கிணைந்த மற்றும் நிலையான வளர்ச்சியை அவசியமாக உறுதிப்படுத்துவதற்கு, சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்படுத்துதலை எளிமைப்படுத்துவதற்கு; நிலையான வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகளை இயல்விப்பதற்கு அவற்றுக்கு வழிகாட்டுதல் செய்து முன்னேற்றுவதற்கு; திட்டங்களின் சீர்மிகு செயல்படுத்துதலுக்கு அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்புகளுடன் ஒருங்கிணைந்திருப்பதற்கும்; கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்பதாலும்,

மற்றும் சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளில் செயல்திட்டங்கள் மற்றும் திட்டங்களின் செயல்படுத்துதலை எளிமைப்படுத்துவதற்கு அரசுத் துறைகள், உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் மற்றும் பிற சட்டமுறையிலான அதிகாரஅமைப்புகளுடன் ஒருங்கிணைவதற்கு சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையங்களுக்கு அதிகாரமளிப்பது தேவை என்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I.

## முன்னுரை.

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கலாகும், அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கும், வெவ்வேறு பிரிவுகளுக்கும் வெவ்வேறு தேதிகள் குறித்துரைக்கப்படலாம்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறானாலன்றி,—

(a) ''வசதிகள்'' என்பது தெருக்கள், திறந்தவெளிகள், பூங்காக்கள், பொழுதுபோக்குத் திடல்கள், விளையாட்டு மைதானங்கள், குடிநீர் மற்றும் மின்சார வழங்கல், தெருவிளக்குகள், கழிவுநீர் அமைப்பு, வடிகால் அமைப்பு, பொதுப் பணிகள் மற்றும் பிற பயன்பாடுகள், சேவைகள் மற்றும் வசதிகள் (conveniences) ஆகியவற்றை உள்ளடக்கும்;

(b) ''தகுதிவாய்ந்த திட்டமிடல் ஆணையம்'' என்பது, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் கூறின் கீழ் வரையறுக்கப்பட்டவாறான தகுதிவாய்ந்த திட்டமிடல் ஆணையம் என்று பொருள்படும்;

(c) ''ஒழுங்கமைக்கப்படாத மனைப்பிரிவு அல்லது வழக்கொழிந்த மேம்பாட்டுப் பகுதி'' என்பது, ஒழுங்கமைக்கப்படாத முறையில் அல்லது வழக்கொழிந்த மேம்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட நிலத்தைக் கொண்ட ஒரு பகுதி, அதனுடன் ஒட்டியுள்ள அல்லது அருகிலுள்ள பிற நிலங்களையும் உள்ளடக்கியதுடன், முறையே 21 ஆம் பிரிவு மற்றும் 26 ஆம் பிரிவின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அல்லது ஒரு விரிவான மேம்பாட்டுத் திட்டத்தால் ஒழுங்கமைக்கப்படாத மனைப்பிரிவு அல்லது வழக்கொழிந்த மேம்பாட்டுப் பகுதியாக பொருள்வரையறுக்கப்பட்ட ஒரு பகுதி என்று பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 35/1972

(d) ''முதன்மைச் சாலை'' என்பது, நகரங்களை ஒன்றுடன் ஒன்று இணைத்து, ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்குப் பொருட்கள் மற்றும் மக்களின் போக்குவரத்தை எளிதாக்கும் எந்தவொரு நெடுஞ்சாலையும் என்று பொருள்படும்;

(e) ''ஆணையம்'' என்பது 4ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம் என்று பொருள்படும்;

(f) ''கட்டிடம்'' என்பது—

(i) ஒரு வீடு, வெளிப்புறக் கட்டிடம், குதிரை லாயம், கழிப்பறை, கிடங்கு, கொட்டகை, குடிசை, சுவர் (எல்லைச் சுவரைத் தவிர) மற்றும் கல், செங்கல், மண், மரம், உலோகம் அல்லது வேறு ஏதேனும் பொருளால் ஆன மற்ற எந்தவொரு அமைப்பு;

(ii) சக்கரங்கள் மீது அமைக்கப்பட்ட அல்லது அடித்தளங்கள் இல்லாமல் வெறுமனே தரையில் நிற்கும் ஒரு அமைப்பு;

(iii) மனிதர்கள் வசிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது ஏதேனும் பொருட்கள் அல்லது சரக்குகளை வைத்திருப்பதற்காகவோ அல்லது சேமிப்பதற்காகவோ பயன்படுத்தப்படும் ஒரு கப்பல், படகு, கூடாரம், சரக்குச் சிற்றுந்து (van) மற்றும் வேறு எந்தவொரு அமைப்பும்; மற்றும்

(iv) ஏதேனும் ஒரு கட்டிடத்துடன் தொடர்புடைய தோட்டம், நிலப்பரப்பு, வண்டிகள் மற்றும் குதிரை லாயங்கள் ஏதேனும் இருப்பின் அவை;

ஆகியவற்றை உள்ளடக்கும்;

(g) ''நிறுமம்'' என்பது, 2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (20) ஆம் கூறின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனம் என்று பொருள்படும்;

(h) ''விரிவான மேம்பாட்டுத் திட்டம்'' என்பது, 26 ஆம் பிரிவின் கீழ் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு திட்டம் என்று பொருள்படும்;

(i) ''மேம்பாடு'' என்பது, இந்தச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒரு சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அல்லது ஒரு விரிவான மேம்பாட்டுத் திட்டம் அல்லது ஒரு நிலச் சேர்மப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றையும் மேற்கொள்வது என்று பொருள்படும், மேலும் கட்டிடம் கட்டுதல், பொறியியல், சுரங்கத் தொழில் அல்லது பிற செயல்பாடுகளை நிலத்தில் அல்லது நிலத்தின் மீது அல்லது நிலத்தின் கீழ் மேற்கொள்வதையும், அல்லது கட்டிடம் அல்லது நிலத்தின் பயன்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை மேற்கொள்வதையும் உள்ளடக்கும்:

வரம்புரையாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, பின்வரும் செயல்பாடுகள் அல்லது நிலத்தின் பயன்பாடுகள் நிலத்தின் மேம்பாட்டைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுதலாகாது, அதாவது—

(i) எந்தவொரு கட்டிடத்தின் பராமரிப்பு, மேம்பாடு அல்லது பிற மாற்றங்களுக்கான கட்டிடத்தின் வெளிப்புறத் தோற்றத்தை குறிப்பிடத்தக்கவாறு பாதிக்காத பணிகள் எந்தவொரு தற்காலிகப் பணிகளையும் மேற்கொள்வது;

(ii) ஒரு சாலையின் பராமரிப்பு அல்லது மேம்பாட்டிற்காகத் தேவையான எந்தவொரு தற்காலிகப் பணிகளையும் உள்ளாட்சி அதிகார அமைப்பினால் மேற்கொள்வது, அல்லது சாலையின் எல்லைகளுக்குள் உள்ள நிலத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்;

(iii) ஓர் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வ அதிகார அமைப்பினால், எந்தவொரு கழிவுநீர் அமைப்புகள், பிரதான குழாய்கள், கம்பிவடங்கள் அல்லது பிற சாதனங்களை ஆய்வு செய்தல், பழுதுபார்த்தல் அல்லது புதுப்பித்தல் ஆகிய நோக்கங்களுக்காக எந்தவொரு தற்காலிகப் பணிகளை மேற்கொள்வது, அந்த நோக்கத்திற்காக எந்தவொரு தெரு அல்லது பிற நிலத்தை உடைத்துத் திறப்பதையும் இது உள்ளடக்கும்;

(iv) ஒரு குடியிருப்பு வீட்டின் வளாகத்திற்குள் உள்ள எந்தவொரு கட்டிடத்தையும் அல்லது பிற நிலத்தையும், அந்த குடியிருப்பு வீட்டை அனுபவிப்பதற்கு இடைவிளைவான எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்துவது; மற்றும்

(v) விவசாயம், தோட்டக்கலை அல்லது வனவியல் (காடு வளர்ப்பு உட்பட) நோக்கத்திற்காக எந்தவொரு நிலத்தையும் பயன்படுத்துவது, மற்றும் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட நிலத்துடன் சேர்த்து ஆக்கிரமிக்கப்பட்ட எந்தவொரு கட்டிடத்தையும் இந்த வகைமுறையின் இந்தக் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்துவது;

(j) ''மேம்பாட்டு உரிமைச் சான்றிதழ்'' என்பது, சிறப்பு மேம்பாட்டுப் பகுதி ஆணையத்தின் உறுப்பினர்—செயலாளரின் எண்ம கையொப்பம் உள்ளடங்கலான கையொப்பம். இது, உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் உரிமை கோரக்கூடிய கட்டப்பட்ட பகுதியின் சதுர மீட்டரில் உள்ள தளப்பரப்புக் குறியீட்டு வரவு, அது உருவாக்கப்பட்ட இடம் மற்றும் தொடர்புடைய ஆண்டிற்காகப் பதிவுத் துறையால் வெளியிடப்பட்ட வழிகாட்டி மதிப்பில் வகுத்துரைக்கப்பட்டுள்ளவாறான அந்த மனையின் விகிதம் ஆகியவற்றுடன் வழங்கப்படும் ஒரு சான்றிதழ் என்று பொருள்படும்;

(k) ''மேம்பாட்டு உரிமைகள்'' என்பது, மேம்பாட்டு உரிமைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான அல்லது நிலம் அல்லது கட்டிடம் அல்லது இரண்டையும் மேம்படுத்துவதற்கான உரிமை என்று பொருள்படும்;

(l) ''இயக்குநர்'' என்பவர், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் பணியமர்த்தப்பட்ட நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் என்று பொருள்படும்;

(m) ''தரைப் பரப்பு குறியீடு'' என்பது, குறிப்பாக அறிவிக்கை மூலம் விலக்களிக்கப்பட்ட பகுதிகளைத் தவிர, அனைத்துத் தளங்களிலும் உள்ள முற்றிலும் உள்ளடங்கிய பரப்பளவை (அடித்தளப் பரப்பளவை) மனையின் பரப்பளவால் வகுக்கக் கிடைக்கும் ஈவைக் குறிக்கும், அதாவது:

தரைப்பரப்பு குறியீடு = அனைத்துத் தளங்களிலும் உள்ள முற்றிலும் உள்ளடங்கிய பரப்பளவு / மனையின் பரப்பளவு.

(n) ''நிதியம்'' என்பது, 55 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட நிதியம் என்று பொருள்படும்;

(o) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(p) ''நிலம்'' என்பது நிலத்திலிருந்து எழும் பயன்கள், மற்றும் பூமியுடன் இணைக்கப்பட்ட அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட எவற்றுடனும் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்;

(q) ''நிலச் சேர்ம பகுதி மேம்பாட்டுத் திட்டம்'' என்பது தனி நபரால் அல்லது தனி நபர்களின் குழுவிற்குச் சொந்தமான நிலம் ஒன்றிணைக்கப்பட்டும் ஆணையத்தால் மேம்படுத்தப்பட்டும், அத்தகைய மேம்பாட்டு நிலத்தின் பகுதியை உண்மையான உரிமையாளருக்கு உரிமை மாற்றம் செய்து அத்தகைய நிலத்தின் எஞ்சியுள்ள பகுதியை பொதுவான வசதிகள் மற்றும் சிறப்பு வசதிகளை உருவாக்குவதற்காக அல்லது விற்பனைக்காக பயன்படுத்தப்படும் திட்டம் என்று பொருள்படும்;

(r) ''உள்ளாட்சி அதிகார அமைப்பு'' என்பது 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒரு மாநகராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது பேரூராட்சி அல்லது 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஒரு கிராம ஊராட்சி என்று பொருள்படும்;

(s) ''அறிவிக்கை'' என்பது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை என்று பொருள்படும்;

(t) ''குடியிருப்பாளர்'' என்பவர்,

(i) அந்தச் சொல்லைப் பயன்படுத்தும் நிலம் அல்லது கட்டிடம் அல்லது அதன் ஒரு பகுதி தொடர்பாக, உரிமையாளருக்கு வாடகை முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ தற்போது செலுத்தும் அல்லது செலுத்த வேண்டிய பொறுப்புள்ள எந்த ஒரு நபரையும், அல்லது அந்த நிலம், கட்டிடம் அல்லது அதன் ஒரு பகுதியை ஆக்கிரமித்திருப்பதற்காக இழப்பீடு செலுத்தும் அல்லது செலுத்த வேண்டிய எந்தவொரு நபரையும் எவரும்; மற்றும்

(ii) வாடகையின்றி வசிப்பவர்;

ஆகியோரை உள்ளடக்கும்.

(u) ''உரிமையாளர்'' என்பவர், அந்தச் சொல்லைப் பயன்படுத்தும் சொத்துடன் தொடர்பாக, தன்னுடைய கணக்கிற்காக அல்லது மற்றொரு நபருக்காக முகவர், அறங்காவலர், பாதுகாவலர், மேலாளர் அல்லது பெறுநர் என்ற வகையில் செயல்பட்டுக் கொண்டோ, அல்லது எந்தவொரு மத அல்லது தொண்டு நோக்கங்களுக்காக, தற்போது வாடகை அல்லது அந்தச் சொத்தின் இலாபங்களைப் பெறுகின்ற அல்லது பெறுவதற்கு உரிமை கொண்டிருக்கிற நபரை உள்ளடக்கும்;

(v) ''மனை'' என்பது, ஏதேனும் பொது நோக்கத்திற்காக அல்லது ஏதேனும் உள்ளாட்சி அதிகார அமைப்பினால் மேற்கொள்ளப்படும் உள்ளாட்சி நிர்வாகத்துடன் தொடர்புடைய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட, ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்பட்ட நிலத்தைத் தவிர, ஒரே உடைமையுரிமையில் உள்ள நிலத்தின் தொடர்ச்சியான ஒரு பகுதி என்று பொருள்படும்;

(w) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(x) ''பொதுக் கட்டிடம்'' என்பது, பொதுமக்கள் அல்லது பொதுமக்களில் எந்தவொரு பிரிவுக்கோ அல்லது வகுப்பினருக்கோ அணுகல் வழங்கப்படும் எந்தவொரு கட்டடம், அல்லது பொதுமக்களுக்கு அல்லது பொதுமக்களில் எந்தவொரு பிரிவுக்கோ அல்லது வகுப்பினருக்கோ திறந்து வைக்கப்பட்டுள்ள எந்தவொரு கட்டடம் எனப் பொருள்படும், மேலும் அது—

(a) (i) பள்ளி அல்லது கல்லூரி (பயிற்சிப் பள்ளி அல்லது பயிற்சிக் கல்லூரி உட்பட), அல்லது பல்கலைக்கழகம் அல்லது பிற கல்வி நிறுவனங்கள்;

(ii) விடுதி;

(iii) நூலகம்;

(iv) மருத்துவமனை, செவிலியர் இல்லம், மருந்தகம், மருத்துவமனை, மகப்பேறு மையம் அல்லது அதுபோன்ற வேறு எந்த நிறுவனங்கள்;

(v) மன்றம்;

(vi) தங்குமிடம், உண்டி உறைவிட விடுதி, உணவகம், குளம்பியகம் அல்லது உணவு உண்ணுமிடம்;

(vii) சத்திரம்;

ஆகியவையாக பயன்படுத்தப்பட்ட;

(b) சங்கம் எதனாலும் பயன்படுத்தப்பட்ட;

(c) பொதுவாக மைய அல்லது ஏதேனும் மாநில அரசால் அல்லது ஏதேனும் உள்ளாட்சி அதிகார அமைப்பால் அல்லது ஏதேனும் சட்டப்பூர்வ ஆணையத்தால் அல்லது மைய அல்லது ஏதேனும் மாநில அரசிற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஒரு நிறுவனத்தால், அல்லது பொதுமக்களால் அல்லது பொதுமக்களின் ஏதேனும் ஒரு பிரிவு அல்லது வகுப்பினரால், சமய வழிபாட்டிற்காக அல்லது சமயக் கூட்டங்களுக்காக, பொதுக் கூட்டங்களுக்காக அல்லது திருமண விழாக்களைக் கொண்டாடுவதற்காக அல்லது விருந்துகளை நடத்துவதற்காக அல்லது அதுபோன்ற பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்களையும் உள்ளடக்கும்.

(y) ''பொது நோக்கம்'' என்பது பொதுமக்களுக்கோ அல்லது பொதுமக்களின் ஏதேனும் ஒரு வகுப்புக்கோ அல்லது பிரிவினருக்கோ பயனுள்ள எந்தவொரு நோக்கமும் என்று பொருள்படும்;

(z) ''மனைகளை மறுசீரமைத்தல்'' என்பது, எந்தவொரு பொது நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்ட, ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலத்தைப் பிரிப்பதைத் தவிர, ஒரு சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதன் மூலம் மனைகளில் மாறுபாடு செய்வது என்று பொருள்படும்;

(za) ''ஒழுங்குமுறைவிதிகள்'' என்பது, 73 ஆம் பிரிவின் கீழ் ஆணையத்தால் இயற்றப்பட்ட ஒழுங்குமுறைவிதிகள் என்று பொருள்படும்;

(zb) ''குடியிருப்பாளர்களை இடமாற்றம் செய்தல்'' என்பது, ஒழுங்கமைக்கப்படாத மனைப்பிரிவு அல்லது வழக்கொழிந்த மேம்பாட்டுப் பகுதி கொண்ட ஒரு பகுதி அல்லது குடிசைப் பகுதி தொடர்பான, அந்தப் பகுதியில் அல்லது வேறு இடங்களில், குடியிருப்பு நோக்கங்களுக்காக அல்லது வணிகம் அல்லது பிற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, வசதிகளுடன் சேர்த்து, மேற்கூறிய பகுதியில் வசிக்கும் அல்லது வணிகம் அல்லது பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு, இவ்வாறு கூறப்பட்ட பகுதி முறையாகத் திட்டமிடப்படுவதற்காக, அந்த நபர்களுக்கு அத்தகைய தங்குமிடத்தை வழங்குவது என்று பொருள்படும்;

(zc) ''சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம்'' என்பது 21 ஆம் பிரிவின்கீழ் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம் என்று பொருள்படும்;

(zd) ''சிறப்பு மேம்பாட்டுப் பகுதி'' என்பது. 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு சிறப்பு மேம்பாட்டுப் பகுதியாக அரசால் விளம்புகை செய்யப்பட்ட பகுதி எதுவும் என்று பொருள்படும்;

(ze) ''சிறப்பு நோக்க நிறுவனம்'' என்பது, செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் ஐம்பத்தொரு சதவீதத்திற்குக் குறையாத பங்குகளை அரசு வைத்திருக்கும் எந்தவொரு நிறுவனம் என்று பொருள்படும்; மேலும் அத்தகைய நிறுவனத்தின் துணை நிறுவனத்தையும் உள்ளடக்கும்;

(zf) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

(zg) ‘‘மாநிலக் குழு‘‘ என்பது 13 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட மாநில அளவிலான வழிகாட்டிக் குழு என்று பொருள்படும்;

(zh) ‘‘சட்டப்பூர்வ அதிகார அமைப்பு’’ என்பது வேறு எந்த மாநிலச் சட்டங்களின்படியோ அல்லது அவற்றின் கீழோ நிறுவப்பட்ட எந்தவொரு அதிகார அமைப்பு, வாரியம், கழகம், மன்றம், நிறுவனம், பல்கலைக்கழகம் அல்லது வேறு பிற கூட்டு நிறுவனம் என்று பொருள்படும்;

(zi) ‘‘மேம்பாட்டு உரிமைகளின் மாற்றம்‘‘ என்பது, நேர்விற்கேற்ப, அரசால் அல்லது தொடர்புடைய அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளுக்கு உட்பட்டு, கூடுதல் கட்டடப் பரப்பளவைக் கட்டுவதற்கு உரிமையாளருக்கு உரிமை அளிக்கின்ற கூடுதல் தரைப்பரப்புக் குறியீடு அல்லது மேம்பாட்டு உரிமைகளின் வடிவத்தில் வகுத்துரைக்கப்படலாகும் நோக்கத்திற்காக இடம் அல்லது நிலத்தின் உரிமையாளர் எவருக்கும் வழங்கப்படும் இழப்பீடு என்று பொருள்படும்; மேலும் தரைப்பரப்புக் குறியீட்டுக் கடன், வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய முறையில் வழங்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் – II

## சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்.

சிறப்பு மேம்பாட்டுப் பகுதியினை விளம்புகை செய்தல்.

3. (1) மாநிலத்தில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு பகுதியும் சிறப்பு மற்றும் திட்டமிடப்பட்ட முறையில் மேம்படுத்தப்பட வேண்டும் என்று அரசு கருதினால், ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கை மூலம், அத்தகைய பகுதியை ஒரு சிறப்பு மேம்பாட்டுப் பகுதியாக அறிவிக்கின்ற தங்களின் நோக்கத்தை அறிவிக்கை செய்யலாம். மேலும், பொருத்தமெனக் கருதும் வகையில், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் மூலம் அத்தகைய பகுதியைச் சேர்க்கலாம், மாற்றலாம் அல்லது குறைக்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது தொடர்பான பகுதியின் எல்லைகளை வரையறுத்தல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்ட பகுதிகளிலுள்ள எந்தவொரு குடியிருப்பாளரும், உள்ளாட்சி அதிகார அமைப்பும், சட்டப்பூர்வ அதிகார அமைப்பும் அல்லது நிறுவனமும், அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், அந்த அறிவிப்பில் அடங்கியுள்ள எதற்கும், தங்களது மறுப்பினையோ அல்லது கருத்தையோ எழுத்துப்பூர்வமாக அரசிடம் சமர்ப்பிக்கலாம். அரசானது, அத்தகைய அனைத்து மறுப்புகளையும் கருத்துக்களையும் பரிசீலித்தல் வேண்டும்.

(4) அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதம் கழிவுற்ற பின்பு மற்றும் மறுப்புகள் அல்லது ஆலோசனைகள் ஏதேனும் இருப்பின், அவற்றைப் பரிசீலித்த பின்பு, அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கையின் மூலம் ஏதேனும் மாற்றங்களுடன் அல்லது மாற்றமின்றி அந்தப் பகுதியை, ஒரு சிறப்பு மேம்பாட்டுப் பகுதியாக அறிவிக்கலாம்; மற்றும் அந்தச் சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் பெயரைக் குறிப்பிடலாம்.

4. (1) 3 ஆம் பிரிவின் கீழ் சிறப்பு மேம்பாட்டுப் பகுதி விளம்புகை செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கையின் மூலம், இந்தச் சட்டத்தின் மூலமாகவோ அல்லது அதன் கீழோ தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகளைப் புரிவதற்காக, அந்தப் பகுதிக்கு சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம் என்று வழங்கப்பெறும் ஓர் ஆணையத்தை, அமைத்துருவாக்கலாம்; ஆணையாமானது, கூட்டமைவாக இருத்தல் வேண்டும் என்பதோடு நிலையான வழியுரிமையையும் தனித்த ஓர் இலச்சினையையும் பெற்றிருத்தல் வேண்டும் மேலும் இது மேற்சொன்ன பெயரில் வழக்கிடுதலும் வழக்கிடப்படுதலும் வேண்டும். சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம்.

(2) ஆணையமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அவர்களாவன:

(a) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் பெரும் எந்த மாவட்ட ஆட்சியரின் அதிகார வரம்பிற்குள் வருகிறதோ, அந்த மாவட்ட ஆட்சியர், பதவி வழித் தலைவராக இருத்தல் வேண்டும்;

(b) இந்திய நிருவாகப் பணியின் அலுவலர்களிலிருந்து அரசால் பணியமர்த்தப்பட வேண்டிய தலைமைச் செயல் அலுவலர், உறுப்பினர் செயலாளராக இருப்பார்;

(c) அரசு பொருத்தமெனக் கருதப்படலாகிற மற்றும் அறிவிக்கை செய்யப்படலாகிற, அத்தகைய படிநிலையில் உள்ள பின்வரும் துறைகளுக்கு சார்பாளராயிருக்கின்ற ஓர் உறுப்பினர், அவர்களாவன:—

(i) நகராட்சி நிருவாகத் துறை;

(ii) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை;

(iii) இந்து சமய அறநிலையத்துறை;

(iv) மீன்வளத் துறை;

(v) கால்நடை பராமரிப்புத் துறை;

(vi) பொதுப்பணித் துறை;

(vii) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்;

(viii) நீர்வளங்கள் துறை;

(ix) சுற்றுலாத் துறை;

(x) கலை மற்றும் பண்பாட்டுத்துறை;

(xi) வனத்துறை;

(xii) தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம்;

(xiii) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்.

(d) அரசால் பொருத்தமானவர் எனக் கருதப்படுகிற, திறமை, நேர்மை மற்றும் நற்பெயர் கொண்ட நான்கு நபர்கள், ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கையின் மூலம் அரசால் நியமனம் செய்யப்படுவர்.

(3) ஆணையம் பொருத்தமானதாகக் கருதும் அத்தகைய எண்ணிக்கையிலான சிறப்புமிக்க அல்லது நற்பெயர் பெற்ற நபர்களை, அதன் எந்தவொரு கூட்டத்திலும் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொள்ள அழைக்கலாம். அத்தகைய சிறப்பு அழைப்பாளர்கள் ஆணையத்தின் விவாதங்களில் பங்கேற்பார்கள், ஆனால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை.

(4) ஆணையத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம், பணி நிபந்தனைகள் மற்றும் தற்காலிக காலியிடங்களை நிரப்பும் முறை ஆகியவை வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக, அரசானது எந்நேரத்திலும், எழுத்துப் பூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, அலுவல் சாரா உறுப்பினர் எவரையும் அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பே பதவி நீக்கம் செய்யலாம்.

(5) ஓர் அலுவல் சாரா உறுப்பினர், அரசிற்கு முகவரியிடப்பட்ட தனது கைப்பட எழுதிய கடிதத்தின் மூலம், தனது பதவியை விட்டு விலகலாம், ஆனால் அரசால் அவரது பதவி விலகல், ஏற்றுக்கொள்ளப்படும் வரை, அவர் அப்பதவியில் நீடித்தல் வேண்டும்.

ஆணையத்தின் கூட்டங்கள்.

5. (1) ஆணையம், தகுதியானதாகக் கருதும் இடங்களில், குறைந்தது ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் ஒருமுறை கூட வேண்டும்; மேலும், அதன் கூட்டங்களில் நடைபெறும் பணிகள், அதில் பங்கேற்பதற்கான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை (quorum) உட்பட, ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை விதிகளைப் பின்பற்ற வேண்டும்:

வரம்புரையாக, அவசர நிலை ஏற்பட்டால், ஆணையம் எந்தவொரு விவகாரத்தையும் உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை (circulation) மூலம் தீர்மானிக்கலாம்.

(2) ஆணையத்தின் அனைத்து தீர்மானங்களும், வழிமுறைகளும் மற்றும் பரிந்துரைகளும் எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.

ஆணையத்தில் உள்ள காலிப் பணியிடம் முதலியவைகள், நடவடிக்கைகளைச் செல்லாததாக்காது.

6. ஆணையத்தின் எந்தவொரு செயலும் அல்லது நடவடிக்கையும் பின்வரும் காரணங்களால் மட்டும் செல்லாததாக்கப்படுதல் கூடாது, அதாவது:–

(a) ஆணையத்தின் அமைப்பில் உள்ள எந்தவொரு காலிப் பணியிடம் அல்லது குறைபாடு;

(b) ஆணைய உறுப்பினரை நியமிப்பதில் உள்ள எந்தவொரு குறைபாடு; அல்லது

(c) வழக்கின் சாரத்தைப் பாதிக்காத வகையில், ஆணையம் பின்பற்றிய நடைமுறையில் ஏற்பட்ட எந்தவொரு ஒழுங்கின்மை.

ஆணையத்தின் அலுவலர்களும் ஊழியர்களும்.

7. (1) ஆணையமானது, அரசின் முன் அனுமதியுடன், வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை அத்தகைய முறையில் நியமனம் செய்யலாம்.

(2) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணி நிபந்தனைகளும் வரையறைகளும், வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

ஆணையமானது திட்டமிடல் அதிகார அமைப்பாக இருத்தல்.

8. (1) 22 ஆம் பிரிவின் கீழ் சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்திற்கு ஒப்புதல் அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், ஆணையமானது, சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்குத் திட்டமிடல் அதிகார அமைப்பாகச் செயல்படுதல். வேண்டும்.

(2) ஆணையம், ஒரு சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்கான திட்டமிடல் அதிகார அமைப்பாக மாறிய தேதியன்றும் அது முதற்கொண்டும், அத்தகைய தேதிக்கு உடனடி முன்பு சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்குள் அடங்கிய பகுதிகளில் செயல்பட்டு வந்த உரிய திட்டமிடல் அதிகார அமைப்பானது, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் தாங்கள் கொண்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துதல், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் செயற்பணிகளை மேற்கொள்ளுதல் போன்றவைகள் அற்றுப்போதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

ஆணையத்தின் செயற்பணிகள்.

9. ஆணையமானது—

(1) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் ஒழுங்கான, முழுமையான மற்றும் நிலையான வளர்ச்சியை திட்டமிடல் முறையில் ஊக்குவித்தல், எளிதாக்குதல் மற்றும் உறுதி செய்தல்;

(2) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் வளர்ச்சிக்காக சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தைத் தயாரித்தல்;

(3) அரசின் ஒப்புதலைப் பெற்ற பின்பு, அவ்வாறு தயாரிக்கப்பட்ட சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தைச் செயல்படுத்துதல்;

(4) அத்தகைய பகுதியில் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்குதல்;

(5) நிலையான முறையில் சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் முழுமையான வளர்ச்சியை எளிதாக்குவதற்காக வளங்கள், உள்கட்டமைப்பு மற்றும் பிற வழிகளை மேம்படுத்துதல்;

(6) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் வளர்ச்சிக்கான எந்தவொரு திட்டம் அல்லது செயற்திட்டத்திற்கும் நிதி திரட்டுதல்;

(7) சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்திற்கு இணங்க, திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமைகளைத் தீர்மானித்தல் தொடர்பாக தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகள் அல்லது சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(8) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் மேம்பாட்டிற்கான எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்தும் பணியை, எந்தவொரு உள்ளாட்சி அதிகார அமைப்புகள் அல்லது சட்டப்பூர்வ அதிகார அமைப்புகள் அல்லது வேறு எந்த முகமைகளிடம் ஒப்படைத்தல்;

(9) தனியார் துறை முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் உகந்த ஒரு கட்டமைப்பை உருவாக்கி தொழில் துறையால் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் மற்றும் தொழில்முனைவோரை ஆதரிக்கும் அமைப்புகளை நிறுவுதல்;

(10) செலவு குறைந்த கொள்கைகள் மூலம் பயணம் மற்றும் சுற்றுலாத் துறைகளை மேம்படுத்துவதில் அரசிற்கு உதவுதல்;

(11) தொடர்புடைய துறைகளுடன் இணைந்து, அந்தப் பகுதியின் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதிக்காமல், சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவித்து சுற்றுச்சூழலுக்கு உகந்த சுற்றுலாத் தலங்களை சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் மேம்படுத்துதல்;

(12) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் அழகியல், செயல்திறன் மற்றும் நிலையான தன்மையை உறுதி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

(13) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் குறிப்பாக தூய்மை, அழகியல், சுகாதாரம் மற்றும் நலவாழ்வு தொடர்பானவற்றில், குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல், மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, உட்கட்டமைப்பு மற்றும் பிற பணிகள் போன்ற குடிமை வசதிகளை வழங்குவதற்கும் பராமரிப்பதற்கும், உள்ளூர் அதிகார அமைப்புகளும் சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளும் நிலையான ஏற்பாடுகளைச் செய்வதை உறுதி செய்தல்;

(14) சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட செலவினங்களையும் மற்றும் அந்தத் திட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு துறைகள், உள்ளாட்சி அதிகார அமைப்புகள் அல்லது சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளின் செயல்திறனையும் மதிப்பாய்வு செய்தல்;

(15) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் தொல்லியல், வரலாற்று, கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் மதிப்புகளைப் புரிந்துகொள்வதற்கும், பாதுகாப்பதற்கும் மற்றும் பேணுவதற்கும் உரிய ஆராய்ச்சியை ஊக்குவித்து ஆதரித்தல்;

(16) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் பயனுள்ள வளர்ச்சி, திட்டமிடல் மற்றும் கண்காணிப்பை அடைவதற்கான ஒரு முக்கிய கருவியாகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்;

(17) சுற்றுலாவுக்கு உகந்த வகையில், அந்தப் பகுதியின் சுற்றுச்சூழல் அமைப்பின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய கடமைகளை ஆற்றுதல்;

(18) இச்சட்டத்தின் நோக்கங்களை முன்னெடுப்பதற்காக அவசியமான அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு உதவும் எந்தவொரு பிற செயல்களையும், அரசால் ஒப்படைக்கப்பட்டபடியும் அல்லது அவசியமானதாகக் கருதப்படும் வகையிலும் மேற்கொள்ளுதல்.

ஆணையத்தின் அதிகாரங்கள்.

10. ஆணையமானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:—

(1) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் நடைபெறும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல், ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்;

(2) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியுடன் தொடர்புடைய அரசுத் துறைகள் உள்ளாட்சி அதிகார அமைப்புகள், மற்றும் சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளின், திட்டங்கள் மற்றும் முன்னுரிமைகள் குறித்த தகவல்களைக் கோருதல்;

(3) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய பொருட்பாடுகள் குறித்து முடிவுகளை எடுப்பதுடன், இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள், உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் மற்றும் சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்;

(4) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய கட்டிடங்கள், கட்டமைப்புகள், உட்கட்டமைப்பு மேம்பாடு, அழகியல் மற்றும் பிற கட்டுமான நடவடிக்கைகளுக்கான தரநிலைகள் மற்றும் நெறிமுறைகள் குறித்து பொதுவான அல்லது குறிப்பிட்ட ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் அல்லது வழிகாட்டுதல்களை வழங்குதல்;

(5) திட்டங்கள், ஒழுங்குமுறைகள், வழிமுறைகள் மற்றும் தரநிலைகளுக்கு முரணாக, உரிய அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகள் மற்றும் கட்டுமானங்களைச் சிறப்பு மேம்பாட்டு பகுதியிலிருந்து அகற்றுதல்;

(6) நிலையான வளர்ச்சியை வலுப்படுத்தி, சிறப்பு மேம்பாட்டு பகுதியை ஊக்குவிக்கும் முதலீட்டுத் திட்டங்களைத் தயாரித்து, அவற்றைச் செயல்படுத்த பரிந்துரை செய்தல்;

(7) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியை எளிதாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் கட்டட கட்டுமானம், பொறியியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் வளங்கள், உள்கட்டமைப்பு மற்றும் பிற தேவையான வழிகளை உருவாக்குதல்;

(8) அரசால் அவ்வப்போது வகுத்துரைக்கப்படலாகும் கட்டணங்கள், சுங்கவரிகள், மேல்வரி, மேம்பாட்டுக் கட்டணங்கள், மேம்பாட்டுச் சிறப்புக் கட்டணம், உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளுக்கான கட்டணங்கள் ஆகியவற்றை விதித்து வசூலித்தல்;

(9) இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு திட்டம், செயல் அல்லது திட்டப்பணியை செயல்படுத்துவது தொடர்பாக, தொடர்புடைய உள்ளாட்சி அதிகார அமைப்புகள் அல்லது சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல், மேலும் அந்த அதிகார அமைப்புகள் அத்தகைய வழிகாட்டுதல்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்;

(10) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் பயனுள்ள திட்டமிடல், மேம்பாடு மற்றும் மேலாண்மைக்கான கூட்டு முயற்சி அல்லது அரசு–தனியார் பங்களிப்பு மூலம் தனியார் துறையுடன் ஈடுபடுதல்;

(11) அரசின் முன் அனுமதியுடன், சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தை செயற்படுத்தும் நோக்கத்திற்காக, நிலங்கள் மற்றும் பிற எந்தச் சொத்துகளையும் கையகப்படுத்துதல், வைத்திருத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் ஒப்படைவு செய்தல்;

(12) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் சுற்றுலா, தொல்லியல், வரலாறு மற்றும் சுற்றுச்சூழல் மதிப்புள்ள எந்தவொரு நிலம், கட்டிடம் அல்லது வேறு எந்தச் சொத்தையும் பாதுகாப்பதற்காக, வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

(13) அரசின் முன் அனுமதியுடன், எந்தவொரு நிறுவனத்திலும் பங்குகள், பத்திரம், கடன் பத்திரம் அல்லது வேறு ஏதேனும் நிதி ஆவணத்தை வாங்குதல் அல்லது பெறுதல்;

(14) தனது பணிகளைச் செய்வதற்குத் தேவையெனக் கருதும், எந்தவொரு நபர், நிறுவனம், மேம்பாட்டாளர் அல்லது அமைப்புடன் ஓர் ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது சலுகை ஒப்பந்தத்தில் ஈடுபடுதல்;

(15) உதவி அல்லது ஆலோசனை பெறுவதற்காக, அரசு அல்லது தனியார், தேசிய அல்லது சர்வதேச வல்லுநர்கள் அல்லது அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுதல்;

(16) துணைக் குழுக்களை அமைத்தல், அத்தகைய துணைக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்தல்;

(17) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் நிலையான வளர்ச்சிக்குத் தேவைப்படக்கூடிய கணக்கெடுப்புகள், ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகளை மேற்கொள்ளுதல்;

(18) வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதல்.

சிறப்பு நோக்க நிறுவனத்திற்கு ஆணையத்தின் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் ஒப்படைவு செய்தல்.

**11.** (1) ஆணையமானது, அரசின் முன் அனுமதியுடன், 73 ஆம் பிரிவின் கீழ் உள்ள அதிகாரத்தைத் தவிர, அதன் அனைத்து அல்லது சில அதிகாரங்களையும் செயற்பணிகளையும் ஒரு சிறப்பு நோக்க நிறுவனத்திற்கு ஒப்படைவு செய்யலாம்.

(2) சிறப்பு நோக்க நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் குறைந்தபட்சம் ஐம்பத்தொரு சதவீத அளவை அரசு பங்கு வைத்திருப்பது இல்லாமல் போனால் தானாகவே, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்களும் பணிகளும் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணையத்தின் பணிப்புரைகள்.

**12.** (1) ஆணையமானது, இந்தச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துவதற்காகவோ, அல்லது சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் வேறு எந்தவொரு மேம்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காகவோ, தொடர்புடைய எந்தவொரு உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கும் அல்லது சட்டப்பூர்வ அதிகாரஅமைப்பிற்கும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்.

(2) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற எந்தச் சட்டத்திலும் அடங்கியுள்ள எது எவ்வாறுஇருப்பினும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரை ஒவ்வொன்றும், அது வழங்கப்பட்ட உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கு அல்லது சட்டப்பூர்வ அதிகாரஅமைப்பிற்கு இணங்கியிருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்க தவறுவதன் பேரில், (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அதிகார அமைப்பு மேற்கொள்ளவும், அதற்காக ஏற்பட்ட செலவுகள் இருப்பின், அவற்றை தொடர்புடைய உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது சட்டப்பூர்வ அதிகார அமைப்பிடமிருந்து வசூலிக்கவும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் III.

## மாநில அளவிலான வழிகாட்டுக் குழு மற்றும் சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் ஆலோசனைக் குழு.

மாநில அளவிலான வழிகாட்டுக் குழுவினை அமைத்தல்.

**13.** (1) அரசானது, ஆணையங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும் கண்காணிக்கவும், சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளின் திட்டமிடல் மற்றும் வளர்ச்சியுடன் தொடர்புடைய பொருட்பாடுகளில் வழிகாட்டுதல் வழங்கிடவும், மாநில அளவிலான வழிகாட்டுக் குழுவை அமைத்தல் வேண்டும்.

(2) மாநிலக் குழுவானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(i) அரசு தலைமைச் செயலாளர், பதவிவழித் தலைவராக இருப்பார்;

(ii) சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் அறநிலையங்கள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி உறுப்பினர் செயலாளராக இருப்பார்;

(iii) நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(iv) சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(v) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(vi) பொதுப் பணிகள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(vii) நீர்வளத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(viii) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(ix) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(x) கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(xi) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(xii) போக்குவரத்துத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(xiii) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(xiv) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(xv) எரிசக்தித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(3) மாநிலக் குழு, தாம் பொருத்தமானவர்கள் எனக் கருதும் தகுதி, நேர்மை மற்றும் உயர்ந்த நற்பெயர் பெற்ற நான்கு நபர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

(4) மாநிலக் குழு, தாம் பொருத்தமானவர்கள் எனக் கருதும், புகழ் அல்லது உயர்ந்த நற்பெயர் பெற்ற நபர்களை, அதன் எந்தக் கூட்டத்திலும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்ள அழைக்கலாம்.

மாநிலக் குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்.

**14.** மாநிலக் குழுவானது, பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் கொண்டிருக்க வேண்டும், அதாவது:—

(a) சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளின் வளர்ச்சி மற்றும் ஊக்குவிப்பிற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுப்பதற்கு அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

(b) சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளின் ஊக்குவிப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், முதலீட்டுத் திட்டங்களை கருத்தாக்கம் செய்து, தயாரித்து, ஒப்புதல் வழங்குதல்;

(c) சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளின் ஊக்குவிப்பு மற்றும் வளர்ச்சி குறித்து தேவையான இடங்களில் அரசிற்குப் பரிந்துரைகள் வழங்குதல்;

(d) சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளில் சுற்றுலாவின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்தல்;

(e) சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுவதை ஒருங்கிணைத்தல் மற்றும் ஊக்குவித்தல்;

(f) சிறப்பு மேம்பாட்டுப் பகுதிகளின் முழுமையான மற்றும் நிலையான வளர்ச்சியுடன் தொடர்புடைய பொருட்பாடுகளில், அரசின் முன்அனுமதியுடன் அயல்நாட்டு அல்லது பன்னாட்டு அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல்;

(g) ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தின் வரைவில் திருத்தங்களை முன்மொழிதல்;

(h) வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதல் மற்றும் அத்தகைய பிற செயற்பணிகளைப் புரிதல்;

(i) அரசால் அவ்வப்போது வழங்கப்படக்கூடிய அல்லது ஒப்படைக்கப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதல் மற்றும் அத்தகைய பிற செயற்பணிகளைச் செய்தல்.

மாநிலக் குழுவின் கூட்டங்கள்.

**15. (1)** மாநிலக் குழுவானது, ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் குறைந்தது ஒரு முறையாவது, அது பொருத்தமானதாகக் கருதும் இடத்தில் கூடுதல் வேண்டும். மேலும், வகுத்துரைக்கப்படலாகிறவாறு அதன் கூட்டங்களில் அதன் அலுவல்களை நடத்துவது தொடர்பான அத்தகைய நடைமுறை விதிகள், கூட்டத்திற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை உள்ளிட்டவற்றை கடைப்பிடித்தல் வேண்டும்:

வரம்புரையாக: அவசரக்கால நிகழ்வில், மாநிலக் குழுவானது, ஆணையத்தின் உறுப்பினர்களுக்கு எந்தவொரு பொருட்பாட்டையும் சுற்றறிக்கை மூலம் அனுப்பி முடிவு செய்யலாம்.

(2) பதவிவழி உறுப்பினராக உள்ள ஒரு அரசுச் செயலாளரால் எந்தவொரு காரணத்தினாலும் மாநிலக் குழு கூட்டத்தில் கலந்துக்கொள்வதற்கு இயலாத போது, அவருடைய துறையில் அரசுத் துணைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும் கூட்டத்தில் கலந்துக்கொள்ள மாற்றாக அனுப்பலாம். அத்தகைய அலுவலர், அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளில் பங்கேற்கவும், வாக்களிக்கவும் உரிமைப் பெற்றிருப்பார்.

(3) 13 ஆம் பிரிவின் (4)உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள சிறப்பு அழைப்பாளர்களைத் தவிர்த்து, மற்ற அனைத்து உறுப்பினர்களும் வாக்களிக்கும் உரிமையைக் கொண்டிருப்பர்.

(4) மாநிலக் குழுவின் எந்தச் செயலும் அல்லது நடவடிக்கையும், ஏதேனும் காலியிடம் இருப்பதன் காரணமாக அல்லது குறைவெண் குறைவாக இருப்பதன் காரணமாக அல்லது குழுவின் அமைப்பு அல்லது அதன் கூட்டங்கள் நடத்தப்பட்ட முறையில் உள்ள எந்தக் குறைபாட்டினாலும் மட்டுமே செல்லாது எனக் கருதப்படுதல் கூடாது.

சிறப்பு மேம்பாட்டுப் பகுதி ஆலோசனைக் குழு.

**16. (1)** ஒரு சிறப்பு மேம்பாட்டு பகுதிக்காக, 4 ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி ஓர் ஆணையம் அமைக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், அரசு, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் மூலம், அந்த ஆணையத்திற்கு ஆலோசனை வழங்கும் நோக்கத்திற்காக, சிறப்பு மேம்பாட்டுப் பகுதி ஆலோசனைக் குழு என்று அழைக்கப்படும் ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்தல் வேண்டும்.

(2) சிறப்பு மேம்பாட்டுப் பகுதி ஆலோசனைக் குழுவானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் பெரும்பகுதி எந்த மாவட்ட ஆட்சியரின் அதிகார வரம்பிற்குள் வருகிறதோ அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், பதவிவழித் தலைவராக இருத்தல் வேண்டும்;

(b) சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தின் தலைமை செயல் அலுவலர், உறுப்பினர் செயலாளராக இருத்தல் வேண்டும்;

(c) சிறப்பு மேம்பாட்டுப் பகுதி அமைந்துள்ள பகுதி முழுவதும் அல்லது அதன் பெரும்பகுதி அடங்கியுள்ள நாடாளுமன்ற வாக்காளர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர்;

(d) சிறப்பு மேம்பாட்டுப் பகுதி அமைந்துள்ள பகுதி முழுவதும் அல்லது அதன் பெரும்பகுதி அடங்கியுள்ள சட்டமன்ற வாக்காளர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்;

(e) சிறப்பு மேம்பாட்டுப் பகுதி அமைந்துள்ள பகுதி முழுவதும் அல்லது அதன் பெரும்பகுதி அடங்கியுள்ள, நேர்விற்கேற்ப, மாநகராட்சி, நகராட்சி மன்றம் அல்லது பேரூராட்சியின் தலைவர்;

(f) சிறப்பு மேம்பாட்டுப் பகுதி அமைந்துள்ள பகுதி முழுவதும் அல்லது அதன் பெரும்பகுதி அடங்கியுள்ள ஆள்வரை அதிகார வரம்பிற்குட்பட்ட ஒன்றியக் குழுவின் ஊராட்சி மன்றத்தின் தலைவர்;

(g) ஆணையத்தின் தலைவரால் நியமனம் செய்யப்படலாகும், சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்குள் செயல்படும் கிராம ஊராட்சிகளின் இரண்டுக்கும் மிகாத ஊராட்சி மன்றத் தலைவர்கள்;

(h) அரசு தீர்மானிக்கலாகும் அத்தகைய காலஅளவுக்கு சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் சிறப்பியல்பு தொடர்புடைய பொருள்களில் தொடர்பு கொண்டுள்ள எந்தவொரு அரசு சாரா அமைப்பிலிருந்தும், ஆணையத்தின் தலைவரால் நியமிக்கப்படலாகும் ஒரு நபர்;

(3) ஆலோசனைக் குழுவானது, சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்புடைய பொருட்பாடுகளில் ஆணையத்திற்கு பரிந்துரைகள் செய்யலாம்.

(4) ஆலோசனைக் குழுவானது, எந்தவொரு பொருட்பாடுகளின் மீதும் அத்தகைய அறிவுரையை ஆணையம் நாடும்போதெல்லாம் அது தேவையானதெனக் கருதும் அத்தகைய அறிவுரையை வழங்குதல் வேண்டும்.

(5) 2 ஆம் உட்பிரிவின் (c) முதல் (g) வரையிலான கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள், நேர்விற்கேற்ப, நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் அல்லது தொடர்புடைய நேர்விற்கேற்ப தலைவர், தலைமையர் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர் ஓர் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் வரையில் பதவி வகிக்கலாம்.

## அத்தியாயம் IV.
## சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் மற்றும் விரிவான மேம்பாட்டுத் திட்டம்.

சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம்.

17. (1) ஆணையமானது, அது அமைத்துருவாக்கப்பட்டவுடன், கூடிய விரைவில், ஆனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவுக்கு பின்பு அல்லாமல், மற்றும் தொடர்புடைய உள்ளாட்சி அதிகார அமைப்புகளுடன் கலந்தாலோசித்த பின்பு, சிறப்பு மேம்பாட்டுப் பகுதி அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதிக்கும் மற்றும் சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று அரசானது பணிக்கப்படலாகிற சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்கு அருகாமையில் அல்லது அதனுடன் ஒட்டியுள்ள அல்லது அத்தகைய பிற பகுதிகளுக்கும், ''சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம்'' என்று இதன்பின்பு குறிப்பிடப்படவுள்ள ஒரு திட்டத்தைத் தயாரித்து, மாநிலக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டமானது, பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ முன்மொழியலாம் அல்லது வழிவகை செய்யலாம், அவையாவன: —

(a) இதில் வளங்களைப் பயன்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் மற்றும் வழிமுறைகள், நீடித்தபயணத் தேர்வுகளுக்கு வலுவூட்டுதல் மற்றும் வணிக மற்றும் தொழில்துறை நிறுவனங்கள் தங்கள் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைக்க உதவுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் நிலையான வளர்ச்சிக்கான தொலைநோக்கு, இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் கூடிய நீண்டகால உத்திகள்;

(b) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் உள்ள நிலம் பயன்படுத்தப்பட வேண்டிய முறை;

(c) விரிவான திட்டமிடல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு;

(d) குடியிருப்பு, வர்த்தகம், சுற்றுலா, தொழில்துறை மற்றும் விவசாய நோக்கங்களுக்காகவும், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிப் பகுதிகளுக்காகவும் நிலம் ஒதுக்கீடு செய்தல் அல்லது ஒதுக்கி வைத்தல்;

(e) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் கட்டிடங்கள் மற்றும் பிற கட்டுமானங்களின் இருப்பிடம், உயரம், தளங்களின் எண்ணிக்கை மற்றும் அளவு, முற்றங்கள் மற்றும் பிற திறந்தவெளிப் பகுதிகளின் அளவு மற்றும் கட்டிடங்கள், கட்டுமானங்கள் மற்றும் நிலங்களின் பயன்பாடு ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(f) பொதுக் கட்டிடங்கள், நிறுவனங்கள் மற்றும் குடிமை சிறப்பு வசதிகளுக்காக நிலங்களை ஒதுக்கீடு செய்தல் அல்லது ஒதுக்கி வைத்தல்;

(g) ஆரோக்கியச் சுற்றுலா, இனப் பாரம்பரியச் சுற்றுலா, விருந்தோம்பல் சுற்றுலா, வணிக மற்றும் ஓய்வுநேரச் சுற்றுலா, பேரூர்திச் (caravan) சுற்றுலா, பாரம்பரியச் சுற்றுலா, கிராமப்புற மற்றும் தோட்டச் சுற்றுலா, கடலோரச் சுற்றுலா, சமயச் சுற்றுலா, நீர்வழிச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, திரைப்படச் சுற்றுலா மற்றும் சூழல் சுற்றுலா ஆகியவற்றின் மேம்பாட்டிற்காகவும், தேவைப்படும் இடங்களில் மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளுக்காகவும் நிலங்களை ஒதுக்கீடு செய்தல் அல்லது ஒதுக்கி வைத்தல்;

(h) பழங்குடியினர் பகுதிகள், கடலோரப் பகுதிகள், புதிய நகரங்களை நிறுவுவதற்கான பகுதிகள் போன்ற சிறப்புப் பகுதிகள் ஏதேனும் இருப்பின், அவற்றின் மேம்பாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(i) பாரம்பரிய தளங்களையோ அல்லது அவற்றின் சுற்றுப்புறத்தையோ பாதிக்கக்கூடிய எந்தவொரு மேம்பாட்டு நடவடிக்கையையும் ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய பாரம்பரியத் தளங்களின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(j) நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு இணங்க, இயற்கை இருப்புக்கள், விலங்குகள் சரணாலயங்கள், காடுகள், வனவிலங்குகள், இயற்கை வளங்கள், நிலப்பரப்பு வடிவமைப்பு, தாவரவியல் மற்றும் விலங்கியல் பூங்காக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல், பேணுதல் மற்றும் மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(k) சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்கு உள்ளேயும் சுற்றியும் இணைப்பு மற்றும் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பை உறுதி செய்வதற்காகத் தேவைப்படலாகும் நெடுஞ்சாலைகள், பிரதான சாலைகள், சுற்றுச் சாலைகள், முக்கிய தெருக்கள், தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வழித்தடங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(l) ஒழுங்கற்ற அமைப்பு அல்லது வழக்கற்றுப்போன மேம்பாடுடைய பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவதற்கும், அவற்றில் வசிப்பவர்களை மீள்குடியேற்றம் செய்வதற்குமான ஏற்பாடுகளைச் செய்தல்;

(m) வீட்டுவசதி, சுற்றுலா, வணிக வளாகங்கள், தொழில்கள், குடிமை வசதிகள், கல்வி மற்றும் கலாச்சார வசதிகளுக்காக குறிப்பிட்ட பகுதிகளை விரிவாக மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(n) போக்குவரத்து மற்றும் பயணமுறை மற்றும் போக்குவரத்து சுழற்சி முறைக்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(o) முக்கிய சாலை மற்றும் தெரு மேம்பாடுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(p) எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(q) புதிய வீட்டுவசதித் திட்டங்கள் மற்றும் வசதிகள், சேவைகள் மற்றும் பயன்பாடுகளை வழங்கும் பிற திட்டங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(r) விடுதிகள், பாரம்பரிய தங்குமிடங்கள், பேரூர்தி பூங்காக்கள், வேறு இடங்களில் நடைபெறும் திருமணங்கள் (destination wedding), பண்ணை இல்லத் தங்குமிடங்கள், படுக்கை மற்றும் காலை உணவு விடுதிகள், முகாம் தளங்கள், சாலையோர வசதிகள், மாநாட்டு மையங்கள், அருங்காட்சியகங்கள், மீன்வளக் காட்சியகங்கள், கருப்பொருள் பூங்காக்கள், குழிப்பந்தாட்ட மைதானங்கள், கம்பிவடப் பாதைகள், நீர் பூங்காக்கள், நீர் விளையாட்டுகள் போன்றவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(s) கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் கட்டடக்கலை அம்சங்கள், முகப்புத் தோற்றம் மற்றும் முன்பக்கத் தோற்றம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(ங) சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டிய படிநிலைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(ப) மையத் திட்டங்கள், மாநிலத் திட்டங்கள், கூட்டு முயற்சிகள் அல்லது பொது–தனியார் கூட்டாண்மைகள் மூலம் மேம்படுத்தப்படக்கூடிய திட்டங்களைக் குறிப்பிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்; மற்றும்

(V) வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய பிற பொருட்பாடுகள்.

(3) சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டமானது, இந்தச் சட்டத்திற்கு முரணாக இல்லாத வகையில், சிறப்பு மேம்பாட்டுப் பகுதியின் முறையான வளர்ச்சிக்குத் தேவையான பிற பொருட்பாடு எதற்காகவும் வகைசெய்யலாம்.

தகுதிவாய்ந்த திட்டமிடல் ஆணையத்திற்குப் பணிப்புரைகள் வழங்குதல்.

18. ஆணையமானது, 22 ஆம் பிரிவின் கீழ் சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தின் ஒப்புதல் வெளியிடப்படும் தேதிக்கு முன்பு, எந்நேரத்திலும், அது தேவையெனக் கருதினால், சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் உள்ள நிலங்கள், கட்டடங்கள் அல்லது வேறு ஏதேனும் சொத்துக்களின் கட்டுமானம் அல்லது மேம்பாட்டின் மீது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அத்தகைய கட்டுப்பாடுகளை விதிக்குமாறு தகுதிவாய்ந்த திட்டமிடல் ஆணையத்தைப் பணிக்கலாம், மேலும் அந்த ஆணையமானது, அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் தயாரிப்பது குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கான அரசின் ஒப்புதல்.

19. (1) 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சிறப்புப் பகுதி முதன்மைத் திட்ட வரைவானது, மாநிலக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், ஆனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்கு பின்பு அல்லாமல், மாநிலக் குழுவானது, சிறப்புப் பகுதி முதன்மைத் திட்ட வரைவில் தான் தக்கதெனக் கருதும் அத்தகைய மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் அதனைச் செய்யுமாறு ஆணையத்தைப் பணிக்கலாம். அதன் பேரில், அந்த ஆணையமானது, அத்தகைய மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் அதனைச் செய்து, அதன் தயாரிப்பு குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கான அரசின் ஒப்புதலுக்காக, வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய காலத்திற்குள் அந்தத் திட்டத்தை அரசிடம் பிறகு சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அரசானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்கு பின்பு அல்லாமல், சிறப்புப் பகுதி முதன்மைத் திட்ட வரைவில் தான் தக்கதெனக் கருதும் அத்தகைய மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் அதனைச் செய்யுமாறு ஆணையத்தைப் பணிக்கலாம். அதன் பேரில், அந்த ஆணையமானது, அத்தகைய மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் அதனைச் செய்து, அதன் தயாரிப்பு குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கான அரசின் ஒப்புதலுக்காக, வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய காலத்திற்குள் அந்தத் திட்டத்தை அரசிடம் மீண்டும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) அரசானது, அவர்களால் பணிக்கப்பட்ட மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைச் செய்த பின்பு, சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தின் வரைவு தயாரிக்கப்பட்டிருப்பது குறித்து, 20 ஆம் பிரிவின் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிடுவதற்கு ஆணையத்திடம் தனது ஒப்புதலை வழங்குதல் வேண்டும்.

20. (1) 19 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிப்பை வெளியிடுவதற்கான அரசின் ஒப்புதலைப் பெற்ற பின்பு, கூடிய விரைவில், ஆனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்கு பின்பு அல்லமால், சிறப்புப் பகுதி முதன்மைத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டிருப்பது குறித்த அறிவிப்பை ஆணையமானது ***தமிழ்நாடு அரசிதழிலும்,*** அப்பகுதியின் முன்னணி நாளிதழ்கள் இரண்டிலாவது வெளியிடுதல் வேண்டும்; அவற்றில் ஒன்று வட்டார மொழியில் இருத்தல் வேண்டும். அந்த அறிவிப்பில், சிறப்புப் பகுதி முதன்மைத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டுவிட்டது என்று குறிப்பிடப்படுதல் வேண்டும், மேலும் அதன் நகல்களைப் பார்வையிடக்கூடிய இடம் அல்லது இடங்களையும் சுட்டிக்காட்ட வேண்டும். அத்துடன், அந்தத் திட்டம் குறித்து எந்தவொரு நபரிடமிருந்தும், அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் எழுத்துப்பூர்வமான மறுப்புகளையும் கருத்துகளையும் கோருதல் வேண்டும்.

சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் தயாரிப்பது குறித்த அறிவிப்பு.

வரம்புரையாக, அத்தகைய கால அளவானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட கால அளவானது, கழிவுற்ற பின்பு, ஆணையமானது, அரசுத் துறைகள், உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலான அவ்வாறு விளக்கமளிப்பதற்கான நியாயமான கோரிக்கை விடுத்த எந்தவொரு நபருக்கும், ஒரு விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பை வழங்குதல் வேண்டும். சிறப்புப் பகுதி முதன்மைத் திட்ட வரைவில் அது பொருத்தமெனக் கருதும் திருத்தங்களைச் செய்து, அத்திட்டத்தை மாற்றங்களுடனோ அல்லது மாற்றங்களின்றியோ ஒப்புதலுக்காக அரசிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

21. சிறப்புப் பகுதி முதன்மைத் திட்ட வரைவானது, அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், ஆனால் வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய கால அளவிற்கு பின்பு அல்லாமல், அரசானது மாநிலக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்பு, தாங்கள் அவசியமெனக் கருதும் மாற்றங்களுடனோ அல்லது மாற்றங்களின்றியோ, அத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்திற்கான ஒப்புதல்.

22. (1) 21 ஆம் பிரிவின் கீழ் சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்திற்கான அரசின் ஒப்புதலானது, ***தமிழ்நாடு அரசிதழிலும்,*** அப்பகுதியின் முன்னணி நாளிதழ்கள் இரண்டிலாவது ஒரு அறிவிக்கையின் மூலம் அரசால் வெளியிடப்படுதல் வேண்டும். அவற்றில் ஒன்று வட்டார மொழியில் இருத்தல் வேண்டும். மேலும், அந்த அறிவிப்பில், சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் பொதுமக்களின் பார்வையிடக்கூடிய இடம் அல்லது இடங்கள் மற்றும் நேரம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் நடைமுறைக்கு வருதல்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட ஒரு அறிவிப்பானது, சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் முறையாக உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான அறுதிச்சான்றாக இருத்தல் வேண்டும். கூறப்பட்ட திட்டமானது, அத்தகைய அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

விரிவான மேம்பாட்டுத் திட்டம்.

**23. (1)** ஆணையமானது, சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்குள் உள்ள எந்தவொரு நிலப்பகுதிக்கும், ''விரிவான மேம்பாட்டுத் திட்டம்'' என அழைக்கப்படும் ஒரு மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு, சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தின் வரைவைத் தயாரிப்பதுடனோ அல்லது அதற்குப் பின்னரோ, ஒரு தீர்மானத்தின் மூலம் முடிவு செய்யலாம்.

(2) விரிவான மேம்பாட்டுத் திட்டமானது, பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ முன்மொழியலாம் அல்லது வகை செய்யலாம், அவைகளாவன:—

(a) காலியாக உள்ள அல்லது ஏற்கனவே கட்டடங்கள் கட்டப்பட்டுள்ள நிலத்தை, கட்டட மனைகளாகப் பிரித்தல் அல்லது மறுசீரமைப்பு செய்தல்;

(b) சந்துகள், தெருக்கள், சாலைகள் மற்றும் போக்குவரத்துப் பாதைகளைக் கட்டுதல், திசை திருப்புதல், நீட்டித்தல், மாற்றுதல், மேம்படுத்துதல் அல்லது மூடுதல்;

(c) கட்டடங்கள், பாலங்கள் மற்றும் பிற கட்டுமானங்களை அமைத்தல், மாற்றுதல், அகற்றுதல் அல்லது இடித்துத் தள்ளுதல்;

(d) விரிவான மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கியுள்ள பகுதிக்குள் உள்ள எந்தவொரு நிலம் அல்லது பிற அசையாச் சொத்தையும், உடனடியாகத் தேவைப்பட்டாலும் இல்லாவிட்டாலும், கொள்முதல், பரிமாற்றம் அல்லது பிற வழிகளில் கையகப்படுத்துதல்;

(e) சொத்து உரிமையாளர்களுக்குச் சொந்தமான நிலங்களின் எல்லைகளை மறுபகிர்வு செய்தல் மற்றும் மனைகளை மறுசீரமைத்தல்;

(f) ஆணையத்தால் கையகப்படுத்தப்பட்ட அல்லது சொந்தமாக்கப்பட்ட நிலத்தை விற்பனை, பரிமாற்றம், குத்தகை அல்லது பிற வழிகளில் முடித்து வைத்தல்;

(g) போக்குவரத்து வசதிகள், குடிநீர் வழங்கல், ஒளியமைக்கும் வசதி, கழிவுநீர் வடிகால், மேற்பரப்பு வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் உள்ளிட்ட வடிகால் வசதிகளை வழங்குதல்;

(h) கழிப்பறைகள், உடை மாற்றும் அறைகள், குடிநீர் நிலையங்கள், உதவி மையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், ஓய்வுப் பகுதிகள், காலணி வைப்பிடங்கள், உடைமைகள் வைப்பறைகள், நினைவுப் பரிசு கடைகள், மருத்துவ அறைகள் மற்றும் மின்னேற்று நிலையங்கள் போன்ற அத்தியாவசிய வசதிகளை வழங்கும் சிறப்பு வசதித் தொகுதிகளின் திட்டமிடப்பட்ட மேம்பாடு;

(i) நடைபாதைகள், சரிவுப் பாதைகள், மின்தூக்கிகள் மற்றும் கழிப்பறைகள் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் வசதிகளை வழங்குதல்;

(j) விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைப்பதற்காக, ஏறி இறங்கும் வசதியுள்ள வாகனங்களை இயக்குதல்;

(k) தெருக்கள், சாலைகள், சதுக்கங்கள், வீடுகள், சமய மற்றும் அறநிலைக்கொடை நோக்கங்களுக்கான கட்டடங்கள், திறந்தவெளி இடங்கள், தோட்டங்கள், பொழுதுபோக்கு மைதானங்கள், பள்ளிகள், சந்தைகள், கடைகள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், மருந்தகங்கள், பொதுக் கட்டடங்கள், மற்றும் அனைத்து வகையான பொது நோக்கங்களுக்காகவும் நிலத்தை ஒதுக்கீடு செய்தல் அல்லது ஒதுக்கி வைத்தல்;

(l) மறுசீரமைக்கப்பட்ட மனைகள் அல்லது (k) கூறில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்பட்ட பகுதிகளை வரையறுத்தல் மற்றும் எல்லை நிர்ணயம் செய்தல்;

(m) சுற்றுலா தொடர்பான உட்கட்டமைப்பை நிறுவுவதற்காக நிலத்தை ஒதுக்கீடு செய்தல் அல்லது ஒதுக்கி வைத்தல்;

(n) விரிவான மேம்பாட்டுத் திட்டத்தால் இடம்பெயர்ந்த நபர்களுக்கு வீடுகள் அல்லது மாற்று வீடுகளுக்காக கட்டடங்களைக் கட்டுதல்;

(o) தொல்பொருள் அல்லது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களை, இயற்கை அழகை, சமய முக்கியத்துவம் அல்லது பொது வழிபாட்டிடங்களை மேம்படுத்துவதற்கான அல்லது பாதுகாப்பதற்கான இடங்களை அல்லது பொருட்களை வரையறை செய்தல்;

(p) கால்வாய்கள், குளங்கள் அல்லது ஆற்றங்கரைகள், கடலோரப் பகுதிகள் மற்றும் இயற்கை அல்லது நிலக்காட்சி அழகுடைய பிற இடங்களைப் பாதுகாத்தல்;

(q) விரிவான மற்றும் நிலையான வளர்ச்சிக்காகவும், அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளுக்குப் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் பல்வேறு இடங்கள் அல்லது தளங்களைக் கண்டறிந்து எல்லைகளை வரையறுத்தல்;

(r) உணவகங்கள், உடல்நலம் மற்றும் நல்வாழ்வு ஓய்வு விடுதிகள், முகாம் தளங்கள், அருங்காட்சியகங்கள், மீன்வளக் காட்சியகங்கள், கேளிக்கை பூங்காக்கள், படகு வீடுகள், கருப்பொருள் பூங்காக்கள், பாரம்பரிய உணவகங்கள், மாநாட்டு மையங்கள், புதிய சுற்றுலாத் தலங்கள், கிராமப்புற அல்லது பண்ணை தங்குமிடங்கள், சுற்றுலா மையங்கள் அல்லது வனவிலங்கு ஓய்வு விடுதிகள் போன்ற திட்டங்களின் வளர்ச்சிக்காக நீர்நிலைகள், காடுகள், கடலோர மற்றும் மலைப் பகுதிகளின் எல்லைகளை வரையறுத்தல்;

(s) முக்கிய நீர்நிலைகள், காடுகள் அல்லது மலைகளுக்கு அருகில் நீர் சாகசச் சுற்றுலா, நிலச் சாகசச் சுற்றுலா மற்றும் வான் சாகசச் சுற்றுலா போன்ற வசதிகளைத் திட்டமிட்டு மேம்படுத்துதல்;

(t) (i) கருத்துரு (theme) பூங்காக்கள், குழிப்பந்தாட்ட (கோல்ப்) மைதானங்கள் அல்லது விளையாட்டு வசதிகள் போன்ற பொழுதுபோக்குச் சுற்றுலா;

(ii) அடிப்படை அல்லது மேம்பட்ட வசதிகளுடன் கூடிய பேரூர்தி பூங்காக்கள் போன்ற பேரூர்திச் சுற்றுலா;

(iii) இல்லவிடுதிகள் (home stays), தோட்டத் தங்குமிடங்கள் அல்லது அனுபவப்பூர்வ ஓய்வு விடுதிகள் போன்ற கிராமப்புற மற்றும் தோட்டச் சுற்றுலா;

(iv) நீர் சார்ந்த நடவடிக்கைகள், அலைச்சறுக்கு, வேகப் படகுகள் அல்லது நீர்ச்சறுக்கு போன்ற கடற்கரை, நீர்வாழ் அல்லது நீருக்கடியிலான சுற்றுலா;

(v) சுகாதார ஓய்வு விடுதிகள் போன்ற மருத்துவ மற்றும் ஆரோக்கியச் சுற்றுலா;

(vi) கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் அல்லது வேறு ஏதேனும் சமய இடங்களுக்கு யாத்திரை செல்வது போன்ற மதச் சுற்றுலா;

(vii) தேசியப் பூங்காக்கள், சதுப்புநிலக் காடுகள் அல்லது கடற்கரைகளில் முகாம் அமைத்தல், பறவைகள் கண்காணித்தல், மலையேற்றம் அல்லது நடைபாதைகள் போன்ற சூழலியல் சுற்றுலா;

(viii) வேறு பிற வகையான சுற்றுலா;

ஆகியவற்றுக்கான திட்டமிடப்பட்ட மேம்பாடு.

(u) நடைபாதைகள் அல்லது சாலைகளில் பகல் ஒளி (daylight) அல்லது அசைவு உணர்விகளைப் பயன்படுத்துதல், சூரிய ஆற்றல் பயன்பாடு, சூரிய சக்தியால் இயங்கும் தெருவிளக்குகள், நீர் சேமிப்பு சாதனங்கள் அல்லது மழைநீர் சேகரிப்பு போன்ற பசுமை முன்முயற்சிகள் மூலம் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான திட்டமிட்ட வளர்ச்சி;

(v) கட்டடங்களின் தன்மை, அடர்த்தி, கட்டடக்கலை அம்சங்கள் மற்றும் உயரம் தொடர்பாக நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதித்தல்;

(w) சாலைகள், இருப்புப்பாதைகள் அல்லது மின்சார விநியோகப் பாதைகளுக்கான கட்டட வரம்புகள் அல்லது கட்டுப்பாட்டு இணைப்புகள்;

(x) பொருத்தமானவையாக உள்ள அல்லது பொருத்தமானவையாக இல்லாத கட்டடங்கள் அல்லது குறிப்பிட்ட பகுதிகளுக்கான நோக்கங்கள்;

(y) கட்டடங்களை ஒட்டிய போதுமான திறந்தவெளிப் பகுதிகள் மற்றும் அவற்றின் பராமரிப்பு;

(z) விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்வரும் பகுதிக்குள் அடங்கிய நிலம், கட்டடங்கள் அல்லது வேறு ஏதேனும் சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு, கூறப்பட்ட திட்டத்தில் வகைசெய்யப்பட்டவாறான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்பேரில், கட்டடங்களைக் கட்டுவதற்கோ அல்லது கூறப்பட்ட திட்டத்திற்கு இணங்கியவாறு பணிகள், மாற்றங்கள் அல்லது மேம்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் முழுத்தொகையை அல்லது ஒரு பகுதியை முன்பணமாகச் செலுத்துதல்;

(za) சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல், காவல்துறையினரைப் பணியமர்த்தல், கண்காணிப்பு படக்கருவிகளை நிறுவுதல் மற்றும் கண்காணித்தல்; மற்றும்

(zb) வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய பிற பொருட்பாடுகள்.

(3) மேற்கூறிய விதிகளின் பொதுத்தன்மைக்குக் குந்தகமின்றி, ஒவ்வொரு விரிவான மேம்பாட்டுத் திட்டமும் பின்வரும் விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அவைகளாவன:—

(a) தற்போதுள்ள மற்றும் முன்மொழியப்பட்ட தெருக்களின் வழித்தடங்களைக் (line) காட்டும் திட்டம்;

(b) திட்டத்தால் உள்ளடக்கப்பட்ட பகுதிகள்;

(c) திட்டத்தின் அனைத்து விவரங்களைப் பற்றிய முழுமையான விளக்கம்;

(d) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக கையகப்படுத்தப்பட்ட அல்லது கையகப்படுத்தப்பட வேண்டிய அனைத்து நிலங்களைப் பற்றிய விளக்கம்;

(e) விரிவான மேம்பாட்டுத் திட்டமானது, வீட்டுவசதி அல்லது மறு குடியமர்வு எதற்கும் வழிவகை செய்யும் நேர்வுகளில், ஆணையத்தால் மேம்படுத்தப்பட வேண்டிய வீடுகள் அல்லது திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் தன்மை தொடர்பான விவரங்கள்;

(f) கையகப்படுத்தப்பட வேண்டிய நிலத்தின் தோராயமான பரப்பளவு மற்றும் பிற விவரங்கள், அத்துடன் அத்தகைய வீட்டுவசதி அல்லது மறு குடியமர்விற்குத் துணைபுரியும், தற்செயலான அல்லது இடைவிளைவான அனைத்து பொருட்பாடுகள்; மற்றும்

(g) திட்டத்தின் வகைமுறைகளை நடைமுறைப் படுத்துவதற்குமான அல்லது செயல்படுத்துவதற்குமான மண்டல ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகள்.

விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் தயாரிப்பு குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கான அரசின் ஒப்புதல்.

24. (1) விரிவான மேம்பாட்டுத் திட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், ஆனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவுக்கு பின்பு அல்லாமல், அரசானது, அந்த விரிவான மேம்பாட்டுத் திட்ட வரைவில், அவர்கள் தக்கதெனக் கருதுகிற அத்தகைய மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் அதனைச் செய்யுமாறு ஆணையத்தை பணிக்கலாம் மற்றும் அதன் பேரில், ஆணையமானது, அத்தகைய மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் அதனைச் செய்து, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவுக்குள் அதன் தயாரிப்பு குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கான ஒப்புதலுக்காக திட்டத்தை மீண்டும் அரசிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அரசானது, அவற்றால் பணிக்கப்பட்ட மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் அவை செய்யப்பட்ட பின்பு, விரிவான மேம்பாட்டுத் திட்ட வரைவின் தயாரிப்பு குறித்து, 25 ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதற்கு அந்த ஆணையத்திற்குத் தனது ஒப்புதலை வழங்குதல் வேண்டும்.

விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் தயாரிப்பு குறித்த அறிவிப்பு.

25. (1) 24 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிப்பை வெளியிடுவதற்கு அரசின் ஒப்புதலைப் பெற்ற பின்பு, கூடிய விரைவில், ஆனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவுக்கு பின்பு அல்லாமல், ஆணையமானது, விரிவான மேம்பாட்டுத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டிருப்பது குறித்த அறிவிப்பை, ***தமிழ்நாடு அரசிதழ்*** மற்றும் அந்தப் பகுதியின் முன்னணி நாளிதழ்களில் குறைந்தது இரண்டிலாவது வெளியிடப்படுதல் வேண்டும்; அவற்றில் ஒன்று வட்டார மொழியில் இருத்தல் வேண்டும். அந்த அறிவிப்பானது, விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடுதல் வேண்டும், மேலும் அதன் நகல்களைப் பார்வையிடக்கூடிய இடம் அல்லது இடங்களையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அத்துடன், அந்தத் திட்டம் தொடர்பாக எந்தவொரு நபரிடமிருந்தும், அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் எழுத்துப்பூர்வமான ஆட்சேபனைகளையும் கருத்துகளையும் கோருதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய கால அளவானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு கழிவுற்ற பின்பு, ஆணையமானது, அரசுத் துறைகள், உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலான அவ்வாறு விளக்கமளிப்பதற்கான நியாயமான கோரிக்கை விடுத்த எந்தவொரு நபருக்கும், ஒரு விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும். மேலும், விரிவான மேம்பாட்டுத் திட்ட வரைவில் அது பொருத்தமெனக் கருதும் திருத்தங்களைச் செய்து, கூறப்பட்ட திட்டத்தை மாற்றங்களுடன் அல்லது மாற்றங்களின்றி ஒப்புதலுக்காக அரசிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

விரிவான மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.

26. விரிவான மேம்பாட்டுத் திட்ட வரைவு அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், ஆனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவுக்கு பின்பு அல்லாமல், அரசானது, கூறப்பட்ட திட்டத்தை அது தேவையெனக் கருதும் மாற்றங்களுடன் அல்லது மாற்றங்களின்றி ஒப்புதல் அளித்தல் வேண்டும்.

விரிவான மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைக்கு வருதல்.

27. (1) 26 ஆம் பிரிவின் படியான விரிவான மேம்பாட்டுத் திட்டத்திற்கான அரசின் ஒப்புதலானது, ஆணையத்தால் ***தமிழ்நாடு அரசிதழ்*** மற்றும் அந்தப் பகுதியின் முன்னணி நாளிதழ்களில் குறைந்தது இரண்டிலாவது வெளியிடப்படுதல் வேண்டும்; அவற்றில் ஒன்று வட்டார மொழியில் இருத்தல் வேண்டும்; மேலும், அத்தகைய அறிவிக்கையானது, விரிவான மேம்பாட்டுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் இடம் அல்லது இடங்கள் மற்றும் நேரத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)–இன் கீழ் வெளியிடப்பட்ட ஒரு அறிவிப்பானது, விரிவான மேம்பாட்டுத் திட்டம் முறையாகத் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான அறுதிச்சான்றாக அமைதல் வேண்டும். கூறப்பட்ட திட்டமானது, அத்தகைய அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் மற்றும் விரிவான மேம்பாட்டுத் திட்டத்தில் மாற்றம் செய்தல் மற்றும் இரத்து செய்தல்.

28. (1) இந்தச் சட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டம், எந்த நேரத்திலும், ஆணையத்தால் ஒரு பிந்தைய திட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்படலாம் அல்லது இரத்து செய்யப்படலாம்.

(2) 17 முதல் 27 வரையிலான பிரிவுகளின் வகைமுறைகள், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த பிந்தைய திட்டத்திற்குத் தேவைப்படலாகும் அத்தகைய மாற்றங்களுடன் பொருந்துதல் வேண்டும்.

(3) அரசானது, எந்த நேரத்திலும், ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம், இந்தச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தை அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டத்தை மாற்றியமைக்கலாம் அல்லது இரத்து செய்யலாம்.

## அத்தியாயம் V.

## நிலம் கையகப்படுத்தல் மற்றும் ஒப்படைப்பு

மேம்பாட்டிற்குத் தேவையான நிலம், பொது நோக்கத்திற்குத் தேவையான நிலமாகக் கருதப்படுதல்.

29. ஒரு சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தின் அதிகார வரம்பிற்குள், அந்தப் பகுதியின் மேம்பாடு அல்லது மறுமேம்பாடு அல்லது சீரமைப்புக்காக, ஒரு சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டத்தில் தேவைப்படும், ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது குறிப்பிடப்பட்ட எந்தவொரு நிலமும், 2013 ஆம் ஆண்டு நியாயமான இழப்பீடு மற்றும் நிலம் கையகப்படுத்துதலில் வெளிப்படைத் தன்மை, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற உரிமைச் சட்டத்தின், பொருள் வரையறையுடன் ஒரு பொது நோக்கத்திற்காகத் தேவைப்படும் நிலமாகக் கருதப்படுதல் வேண்டும். மையச் சட்டம் 30/2013

**30. (1)** சிறப்பு பகுதி முதன்மைத் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர், அந்தத் திட்டத்தில் சிறப்பு மேம்பாட்டு பகுதியின் மேம்பாடு அல்லது மறுமேம்பாடு அல்லது சீரமைப்புக்குத் தேவையானதாகக் குறிப்பிடப்பட்டு, ஒதுக்கப்பட்டு அல்லது நியமிக்கப்பட்ட எந்தவொரு நிலமும் இருக்கிறவிடத்து, அந்த நிலத்தை ஆணையம் கீழ்க்கண்ட முறைகளில் கையகப்படுத்தலாம்,— திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களை வாங்குதலுக்கான அல்லது கையகப்படுத் தலுக்கான அதிகாரம்.

(a) ஒப்பந்தத்தின் மூலம், ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையைச் செலுத்தி; அல்லது

(b) நில உரிமையாளருக்கு வழங்குவதன் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட எந்தவொரு தொகைக்கும் பதிலாக, எவ்வித கட்டணங்களும் மற்றும் சுமைகளுமின்றி இலவசமாக ஒப்படைக்கப்பட்ட நிலப்பரப்பிற்கு எதிராக, மேம்பாட்டு உரிமைகளை மாற்றம் செய்வது; மற்றும், அவரது செலவில் ஒப்படைக்கப்பட்ட நிலத்தின் வசதி மேம்பாடு அல்லது கட்டுமானத்திற்கு எதிரான, கூடுதல் தளப் பரப்பளவு குறியீடு அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேம்பாட்டு உரிமைகளை மாற்றம் செய்வதன் மூலம்; அல்லது

(c) 2013 ஆம் ஆண்டு நியாயமான இழப்பீடு மற்றும் நிலம் கையகப்படுத்தலில் வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற உரிமைச் சட்டத்தின்கீழ், அந்த நிலத்தை கையகப்படுத்துவதற்காக அரசிடம் விண்ணப்பம் செய்வதன் மூலம் மற்றும் ஒப்பந்தத்தின் மூலம் அல்லது நேர்விற்கேற்ப, இந்தச் சட்டத்தின்படி அல்லது மேற்கூறிய மையச் சட்டத்தின்படி மேம்பாட்டு உரிமைகள் மாற்ற வடிவில் தளப் பரப்பளவு குறியீடு மற்றும் கூடுதல் தளப் பரப்பளவு குறியீட்டை வழங்குவதன் மூலம், கையகப்படுத்தப்பட்டவாறான நிலமானது, (அவ்வாறு மேம்படுத்தப்பட்ட அல்லது கட்டப்பட்ட வசதி ஏதேனும் இருப்பின், அதனுடன் சேர்த்து) அனைத்துவிதச் சுமைகளிலிருந்தும் விடுபட்ட நிலையில், முழுமையாக ஆணையத்தின் வசம் உற்றமைதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் (c) கூறின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பெறுவதன்பேரில், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் குறிப்பிடப்பட்ட பொது நோக்கத்திற்குத் தேவையானது என அரசு மனநிறைவடைந்தால், 2013 ஆம் ஆண்டு நியாயமான இழப்பீடு மற்றும் நிலம் கையகப்படுத்தலில் வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற உரிமைச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, அந்த நிலத்தை அரசு கையகப்படுத்தலாம்.

**31.** 30 ஆம் பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கத்திற்காகவோ, அல்லது ஆணையத்தின் பிற கடமைகள் அல்லது செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காகவோ, எந்த நிலமும் தேவையானதாக இருக்குமிடத்து, அந்த நிலத்தின் மீது உள்ள உரிமைகள் மற்றும் நலன்களை, முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ, வாங்குதல், குத்தகை, பரிமாற்றம் அல்லது பிற எந்த முறையிலும் கையகப்படுத்துவதற்காக, அந்த நிலத்தின் பயன்பாட்டில் ஏற்பட்ட இழப்பு அல்லது பறிபோகுதலுக்குச் சீரான அளவிலானதொரு தொகையைச் செலுத்துவதன்பேரில், ஆணையமானது, எந்த நபருடனும் ஒப்பந்தத்தை மேற்கொள்ளலாம். நிலத்தின் மீதான உரிமைகள் மற்றும் நலன்களை ஒப்பந்தத்தின் மூலம் கையகப்படுத்துதல்.

**32.** 20 ஆம் பிரிவு அல்லது 25 ஆம் பிரிவின்கீழ் ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள்,— நிலத்தை விடுவித்தல்.

(a) அந்த அறிவிப்பின் கீழ் உள்ள சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட எந்த நோக்கத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எந்தவொரு நிலம் தொடர்பாகவும், 30 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் வகைசெய்யப்பட்டவாறான நிலம் கையகப்படுத்தப்படவில்லையெனில்; அல்லது

(b) அத்தகைய நிலம் ஒப்பந்தத்தின் மூலம் கையகப்படுத்தப்படவில்லையெனில், அத்தகைய நிலம், அந்த ஒதுக்கீடு, ஒப்படைப்பு அல்லது நியமனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அரசு அறிவிப்பின் மூலம், தங்களுக்கு பொருத்தமெனத் தோன்றும் அத்தகைய காலத்திற்கு அந்த காலவரம்பை நீட்டிக்கலாம்; ஆனால் அந்த நீட்டிக்கப்பட்ட காலவரம்பானது, எந்த நேர்விலும் ஐந்து ஆண்டுகளை மீறுதல் கூடாது.

நிலச் சேர்ம பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

33. (1) ஆணையமானது, இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு திட்டம் அல்லது வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, அரசின் முன் அனுமதியுடன், நிலச் சேர்ம பகுதி மேம்பாட்டுத் திட்டம் என வழங்கப்பெறும் "சிறப்பு நிலச் சேர்மப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை" உருவாக்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் வளர்ச்சித் திட்டமொன்றை உருவாக்குவதற்காக, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின், அத்தியாயம்–IVA ன் 39–A முதல் 39–Y வரையிலான பிரிவுகள், தேவையான மாற்றங்களுடன் பொருந்துதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

## அத்தியாயம் VI.

## சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் வளர்ச்சியின், கட்டுப்பாடு மற்றும் நிலத்தின் பயன்பாடு.

நிலத்தின் பயன்பாடும் மேம்பாடும் திட்டங்களுக்கு இணக்கமாக இருத்தல்.

34. எந்தவொரு சிறப்பு மேம்பாட்டுப் பகுதியிலும் ஒரு சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அல்லது ஒரு விரிவான மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, எந்தவொரு மாநில அரசையோ அல்லது மைய அரசையோ அல்லது எந்தவொரு உள்ளாட்சி அமைப்பையோ தவிர்த்து, வேறு எந்த நபரும், அத்தகைய திட்டத்திற்கு இணங்காமல் அந்தப் பகுதியில் உள்ள எந்தவொரு நிலத்தையும் பயன்படுத்தவோ அல்லது பயன்படுத்தச் செய்யவோ அல்லது எந்தவொரு மேம்பாட்டுப் பணியையும் மேற்கொள்ளவோ கூடாது:

வரம்புரையாக, அத்தகைய திட்டம் நடைமுறைக்கு வரும் தேதியில், எந்த நோக்கத்திற்காக மற்றும் எந்த அளவிற்கு ஒரு நிலம் பயன்படுத்தப்படுகிறதோ, அதே நோக்கத்திற்காகவும் அதே அளவிற்கும் அந்த நிலத்தின் பயன்பாட்டைத் தொடர்வதற்கு, அத்தகைய திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அனுமதிக்கப்படலாம்.

மாநில அரசு எதனின் அல்லது மைய அரசின் அல்லது உள்ளாட்சி அமைப்பு எதனின் சார்பாக மேற்கொள்ளப்படும் வளர்ச்சி.

35. (1) மாநில அரசு எதனின் அல்லது மைய அரசின் அல்லது உள்ளாட்சி அமைப்பு எதனின் எந்தவொரு துறையும், சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் உள்ள, எந்தவொரு நிலம் அல்லது கட்டடத்திலும் வளர்ச்சியை மேற்கொள்ளக் கருதினால், அந்தத் துறையின் பொறுப்பில் உள்ள அலுவலர், அத்தகைய துறையால் வளர்ச்சி மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னர் அதற்கான முழுமையான விவரங்களுடன், தொடர்புடைய அத்தகைய திட்டங்கள் மற்றும் ஆவணங்களுடன், அவ்வாறு செய்வதற்கான அதன் நோக்கத்தை எழுத்து வடிவில் ஆணையத்திற்கு வகுத்துரைக்கப்படலாகிறவாறு தெரிவித்தல் வேண்டும்.

(2) முன்மொழியப்பட்ட வளர்ச்சியானது, சிறப்புப் பகுதியின் முதன்மைத் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கவில்லை என்ற காரணத்தினாலோ அல்லது வேறு எந்த முக்கிய காரணத்தின் அடிப்படையிலோ ஆணையம் ஏதேனும் ஆட்சேபனைகளை எழுப்பினால், நேர்விற்கேற்ப, மாநில அரசு, மைய அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பின் அலுவலர், ஆணையம் எழுப்பிய ஆட்சேபனைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வளர்ச்சி முன்மொழிவில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் அல்லது வளர்ச்சிக்கான முன்மொழிவை ஆணையம் எழுப்பிய ஆட்சேபனைகளுடன் சேர்த்து, முடிவெடுப்பதற்காக அரசிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) அரசானது, வளர்ச்சிக்கான முன்மொழிவை, ஆணையத்தின் ஆட்சேபனைகளுடன் சேர்த்துப் பெற்றவுடன், அந்த முன்மொழிவைத் திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ ஒப்புதல் அளிக்கலாம் அல்லது சூழ்நிலைகளுக்குத் தேவையானவை எனக் கருதக்கூடிய திருத்தங்களை முன்மொழிவில் மேற்கொள்ள அந்த அலுவலருக்கு ஆணையிடலாம்; மேலும், சம்பந்தப்பட்ட அலுவலர், அரசால் அறிவுறுத்தப்பட்ட அத்தகைய திருத்தங்களைச் செய்ய கடமைப்பட்டவராவார்.

வளர்ச்சிக்கான அனுமதி கோரும் விண்ணப்பம்.

36. (1) 22 ஆம் பிரிவின்கீழ் சிறப்புப் பகுதிக்கான முதன்மைத் திட்டம் வெளியிடப்பட்ட நாளன்றோ அல்லது அதன் பின்னரோ, எந்தவொரு மாநில அரசு அல்லது மைய அரசு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பைத் தவிர்த்து எந்தவொரு நபரும், நிலம் அல்லது கட்டடத்தில் எந்தவொரு வளர்ச்சியையும் மேற்கொள்ள கருதினால், வகுத்துரைக்கப்படலாகிறவாறு அத்தகைய படிவத்தில் அத்தகைய ஆவணங்களுடன் இணைத்து, எழுத்து வடிவில் ஆணையத்திடம் அனுமதிக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் இணைத்து சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்கீழ் ஆணையமானது, அனுமதி கோரும் விண்ணப்பங்களுக்கான பதிவேட்டை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவில் பராமரித்தல் வேண்டும்.

(4) மேற்கூறிய பதிவேட்டில், அனுமதி கோரும் விண்ணப்பங்கள் கையாளப்பட்ட முறை குறித்த தகவல்கள் உள்ளிட்ட, அத்தகைய விவரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்; மேலும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தைச் செலுத்தி, பொதுமக்கள் அனைத்து நியாயமான நேரங்களிலும் பார்வையிடக் கூடியதாக அந்தப் பதிவேடு இருத்தல் வேண்டும்.

வளர்ச்சிக்கான விண்ணப்பத்தை வழங்குதல் அல்லது மறுத்தல்.

37. (1) 36 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ், அனுமதி கோரும் விண்ணத்தைப் பெற்றதன்பேரில், ஆணையம் அல்லது அதன் சார்பாக அதனால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய நபர், தேவையெனக் கருதும் அத்தகைய விசாரணைகளை மேற்கொண்ட பின்பு, எழுத்து வடிவிலான ஆணையின் மூலம், அதில் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம் அல்லது அனுமதியை வழங்க மறுக்கலாம்.

(2) ஆணையமானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிக்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வீதத்தில் கட்டணத்தை விதித்தல் வேண்டும்.

(3) ஆணையமானது, அனுமதிக்கான விண்ணப்பத்தின் மீது ஏதேனும் ஆணையைப் பிறப்பிப்பதற்கு முன்பு, தொடர்புடைய விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளுடன் இணங்கும் வகையில், தேவைப்படின் அதில் உள்ள ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கு அல்லது கூடுதல் விவரங்கள் அல்லது ஆவணங்களை வழங்குவதற்கு அல்லது வேண்டுறுத்தப்பட்ட கட்டணத்தில் உள்ள ஏதேனும் குறையைச் சரிசெய்வதற்கு விண்ணப்பதாரருக்கு வாய்ப்பு ஒன்றை வழங்தல் வேண்டும்.

(4) வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதியும், வகுத்துரைக்கப்படலாகும் ஒரு காலத்திற்கு செல்லாற்றலில் இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக: அனுமதியின் காலாவதி எதுவும், இந்தச் சட்டத்தின்கீழ் புதிய அனுமதியைக் கோருவதற்கான அடுத்தடுத்த விண்ணப்பத்திற்குத் தடையாக இருக்காது.

(5) அனுமதி மறுக்கப்படுமிடத்து, அத்தகைய மறுத்தலுக்கான காரணங்கள், உடனடியாக எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டு, அது உடனடியாக விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, அத்தகைய அனுமதியை மறுக்கும் ஆணை ஒன்றைப் பிறப்பிப்பதற்கு முன்னர், விண்ணப்பதாரருக்கு காரணம் காட்டுவதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

அனுமதி வழங்க மறுத்தலின் மீதான மேல்முறையீடு.

38. (1) 37 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட மறுப்பாணையால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும், அத்தகைய ஆணை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் இயக்குநரிடம் மேல்முறையீடு செய்யலாம்:

வரம்புரையாக, மேற்கூறிய காலஅளவு கழிவுற்ற பிறகு தாக்கல் செய்யப்பட்ட ஒரு மேல்முறையீட்டை, குறிப்பிட்ட காலத்திற்குள் மேல்முறையீடு செய்ய முடியாததற்கான போதுமான காரணம் இருப்பதாக நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் இயக்குநர் மனநிறைவு அடைந்தால், அவர் அத்தகைய மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) ஒரு மேல்முறையீட்டைத் தீர்ப்பதில், நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் இயக்குநர், தரப்பினர்களுக்கு தங்களது விளக்கங்களைத் தெரிவிக்க வாய்ப்பு ஒன்றை அளித்த பின்பு, தாம் பொருத்தமெனக் கருதும் அத்தகைய ஆணைகளைப் பிறப்பிக்கலாம். இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையே இறுதியானதாகும். அத்தகைய மேல்முறையீட்டின் மீதான முடிவு நிலுவையில் இருக்கும்போது, நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் இயக்குநர் தாம் பொருத்தமெனக் கருதும் இடைக்கால ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

சிறப்பு மேம்பாட்டு பகுதியிலுள்ள நிலங்கள் மற்றும் கட்டடங்கள் மீதான கட்டுப்பாடு.

39. 22 ஆம் பிரிவின் கீழ் சிறப்பு பகுதி முதன்மைத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட தேதியில் அல்லது அதற்குப் பிறகு, எந்தவொரு நபரும் சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்குள்,

(a) இந்தச் சட்டத்தின்கீழ் தேவையான அனுமதி இன்றி; அல்லது

(b) வழங்கப்பட்ட எந்தவொரு அனுமதிக்கும் மாறாக அல்லது அத்தகைய அனுமதியுடன் வழங்கப்பட்ட எந்தவொரு நிபந்தனையையும் மீறி; அல்லது

(c) நிலம் அல்லது கட்டட மேம்பாட்டிற்கான அனுமதி முறைப்படி இரத்து செய்யப்பட்ட பின்பு; அல்லது

(d) முறையாக திருத்தப்பட்ட அனுமதி எதனையும் மீறி;

எந்தவொரு நில மேம்பாட்டையும் மேற்கொள்ளவோ அல்லது எந்தவொரு கட்டிடத்தையும் கட்டவோ கூடாது.

அங்கீகாரமற்ற வளர்ச்சியின் தேவைப்படலாகும் அகற்றுதலுக்குள்ள அதிகாரம்.

40. (1) 39 ஆம் பிரிவின் (a) முதல் (d) வரையுள்ள கூறுகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு நிலம் அல்லது கட்டிடத்தின் அங்கீகரிக்கப்படாத மேம்பாட்டுப் பணி எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறவிடத்து, அந்த அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குக் குறையாத அத்தகைய குறிப்பிட்ட காலத்திற்குள், அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பின்வரும் நடவடிக்கைகளில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஆணையமானது, உரிமையாளரைக் கோரலாம், அவையாவன:—

(i) 39 ஆம் பிரிவின் கூறு (a) அல்லது (c) இல் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளில், மேற்கூறிய வளர்ச்சி மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு இருந்த நிலைக்கு நிலத்தை மீட்டமைத்தல்;

(ii) 39 ஆம் பிரிவின் கூறு (b) அல்லது (d) இல் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளில், நேர்விற்கேற்ப, அனுமதி அல்லது அதன் நிபந்தனைகளுக்கு இணங்கியவாறு செயல்படுவதை உறுதி செய்தல்.

(2) குறிப்பாக மேற்சொன்ன நோக்கங்களுக்காக, அத்தகைய அறிவிப்பு எதுவும்,—

(i) எந்தவொரு கட்டடத்தையும் அல்லது பணிகளையும் இடிக்குமாறு அல்லது மாற்றுமாறு;

(ii) நிலத்தில் எந்தவொரு கட்டட பணிகள் அல்லது பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு;

(iii) நிலம் அல்லது கட்டடத்தின் எந்தப் பயன்பாட்டையும் நிறுத்துமாறு

கோரலாம்:

வரம்புரையாக: நிலம் அல்லது கட்டடத்தின் எந்தவொரு பயன்பாட்டையும் நிறுத்துமாறு அறிவிப்பு கோரப்படும் நிகழ்வில், ஆணையம், குடியிருப்பாளருக்கும் அறிவிப்பை சார்வு செய்தல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள், அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பயன்பாட்டை நிறுத்தவில்லையெனில், 36 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பம் எதுவும் அல்லது 38 ஆம் பிரிவின்கீழ் மேல்முறையீடு எதுவும் அல்லது நீதிமன்றம் ஒன்றில் வழக்கு நிலுவையில் இருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல், ஆணையம் முதல் நோக்கிலேயே மனநிறைவு அடைந்தால், அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் பயன்பாட்டை நிறுத்துவதற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தினை பூட்டி, வளாகங்களை முத்திரையிட நடவடிக்கை எடுக்கலாம். நேர்விற்கேற்ப, அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், அத்தகைய முத்திரையிடப்பட்ட வளாகங்களுக்கு பாதுகாப்பை வழங்குதல் வேண்டும்.

(4) (a) (1) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும், அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள், வகுத்துரைக்கப்பட்ட முறையில் 36 ஆம் பிரிவின்கீழ் அந்த அறிவிப்பிற்கு உட்பட்ட நிலம் அல்லது ஏதேனும் கட்டடங்கள் அல்லது கட்டுமானங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவோ அல்லது நிலம் அல்லது கட்டடத்தின் எந்தவொரு பயன்பாட்டையும் தொடர்வதற்காகவோ அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம்.

(b) 36, 37 மற்றும் 38 ஆம் பிரிவின் முன்சென்ற வகைமுறைகளானவை, இயன்றவரை இந்த உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு விண்ணபத்திற்கும் பொருந்துதல் வேண்டும்:

வரம்புரையாக: அனுமதி வழங்குவதற்காக, 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அனுமதிக் கட்டணத்துடன் கூடுதலாக, அத்தகைய அனுமதிக் கட்டணத்தைப் போன்று ஐந்து மடங்குத் தொகையைத் தண்டக்கட்டணமாகவும் ஆணையம் விதித்தல் வேண்டும்.

(5) (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பானது, 39 ஆம் உட்பிரிவின் (c) கூறினால் உள்ளடக்கப்பட்ட நிகழ்வுகள் தவிர்த்து, அனுமதிக்கான விண்ணபத்தின் இறுதித் தீர்ப்பு வரை அல்லது அது திரும்பப்பெறப்படும் வரை எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாது.

(6) அவ்வாறு விண்ணப்பிக்கப்பட்ட அனுமதி அந்த விண்ணபத்தின்பேரில் வழங்கப்பட்டால், அந்த அறிவிப்பு நடைமுறைக்கு வராது; அல்லது அவ்வாறு விண்ணப்பிக்கப்பட்ட அனுமதி வழங்கப்படாவிட்டால் அந்த அறிவிப்பு முழுவிளைவை நடைமுறையில் கொண்டிருக்கும்; அல்லது சில கட்டடங்கள் அல்லது கட்டுமானங்களை மட்டுமே தக்க வைத்துக் கொள்வதற்காக அல்லது நிலம் அல்லது கட்டடத்தின் ஒரு பகுதியை மட்டும் தொடர்ந்து பயன்படுத்துவதற்காக அத்தகைய அனுமதி வழங்கப்பட்டால், அத்தகைய கட்டடங்கள் அல்லது கட்டுமானங்கள் அல்லது நிலம் அல்லது கட்டடத்தின் அத்தகைய பகுதி தொடர்பாக அறிவிப்பானது, நடைமுறைக்கு வராது; ஆனால் நேர்விற்கேற்ப, பிற கட்டடங்கள் அல்லது கட்டுமானங்கள் அல்லது நிலம் அல்லது கட்டடத்தின் பிற பகுதிகள் தொடர்பாக முழுமையாக நடைமுறையில் இருக்கும்.

(7) அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அல்லது அனுமதி கோரிய விண்ணப்பம் தீர்க்கப்பட்ட அல்லது திரும்பப்பெறப்பட்ட பிறகு அத்தகைய காலத்திற்குள், அந்த அறிவிப்பு அல்லது அதன் நடைமுறையில் உள்ள எந்தப் பகுதிக்கும் இணங்கவில்லை எனில், ஆணையமானது,—

(a) அறிவிப்பிற்கு இணங்கி நடக்காததற்கு உரிமையாளர் மீது வழக்குத் தொடரலாம்; மேலும் அந்த அறிவிப்பானது, நிலம் அல்லது கட்டடத்தின் எந்தவொரு பயன்பாட்டையும் நிறுத்துமாறுக் கோரும் நிகழ்வில், அந்த அறிவிப்பை மீறி நிலம் அல்லது கட்டடத்தைப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த அனுமதிக்கும் பிற எந்த நபர் மீதும் வழக்குத் தொடரலாம்; மற்றும்

(b) (i) எந்தவொரு கட்டடம் அல்லது கட்டடங்களை இடிப்பது அல்லது மாற்றுவது அல்லது எந்தவொரு கட்டடம் அல்லது பிற கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது போன்ற அறிவிப்பு தேவைப்படும் நிகழ்வில், வளர்ச்சி நடைபெறுவதற்கு முன்னர் இருந்த நிலைக்கு நிலத்தை மீட்டெடுப்பதற்கு ஏதேனும் கட்டடம் அல்லது கட்டுமான பணிகளை மேற்கொள்வது உள்ளிட்ட, ஆணையம் அவசியமாகக் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அனுமதியின் நிபந்தனைகளுக்கு இணங்கி நடப்பதை உறுதி செய்யலாம்; மற்றும்

(ii) சம்பந்தப்பட்ட ஆணையமானது, இதன் சார்பாக தனக்கு ஏற்பட்ட எந்தவொரு செலவுத் தொகையையும், நிலவருவாய் நிலுவையை வசூலிப்பதைப் போன்று உரிமையாளரிடமிருந்து வசூலிக்கலாம்.

**அங்கீகாரமற்ற வளர்ச்சியை நிறுத்துவதற்கான அதிகாரம்.**

**41. (1)** 39 ஆம் பிரிவின் (a) முதல் (d) வரையிலான கூறுகளில் விவரிக்கப்பட்டுள்ள எந்தவொரு அங்கீகரிக்கப்படாத வளர்ச்சிப் பணியும் மேற்கொள்ளப்படுமிடத்து, அந்த வளர்ச்சிப் பணியை நிறுத்துமாறு, அதன் உரிமையாளருக்கும், அந்த வளர்ச்சிப் பணியை மேற்கொள்ளும் நபருக்கும் அத்தகைய அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட நேரத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், ஆணையம் அறிவிப்பு வழங்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவிப்பானது சார்வு செய்யப்பட்டிருக்குமிடத்து, உரிமையாளர் அல்லது ஏதேனும் வளர்ச்சிப் பணியை மேற்கொள்ளும் நபர், அத்தகைய அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட தேதியிலிருந்து வளர்ச்சிப் பணியைத் தொடர்வதை நிறுத்திவிட்டு, அந்த நிறுத்தத்தின் பொருண்மை குறித்த தகவலை, ஆணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பில் கோரப்பட்டுள்ளவாறு, உரிமையாளர் அல்லது வளர்ச்சிப் பணியை மேற்கொள்ளும் நபர், அந்தப் பணியை தொடர்வதை நிறுத்தவில்லை எனில்,—

(a) (1) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, கட்டப்பட்ட கட்டடத்தின் அந்தப் பகுதியை, ஏழு நாட்களுக்குக் குறையாத அத்தகைய காலத்திற்குள் அகற்றுமாறு உரிமையாளருக்கு ஆணையம் அறிவிப்பு ஒன்றை அனுப்பலாம். அதில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அந்த பணிப்புரைக்கு இணங்காவிட்டால், (1) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, கட்டப்பட்ட கட்டடத்தின் அந்தப் பகுதியை ஆணையம் இடித்து அகற்றலாம். மேலும் இதற்காக தன்னால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு செலவுத் தொகையையும் நிலவருவாய் நிலுவையை வசூலிப்பதைப் போன்று உரிமையாளரிடமிருந்து வசூலிக்கும் உரிமையை ஆணையம் கொண்டுள்ளது;

(b) அத்தகைய வளர்ச்சிப் பணிக்காக பயன்படுத்தப்பட்ட மற்றும் அத்தகைய வளர்ச்சிப் பணி நிகழுமிடத்திற்குள் வைக்கப்பட்டிருக்கும், எந்தவொரு கட்டுமானப் பொருள், கருவி, இயந்திரம், தளவாடங்கள், சாரக்கட்டு, ஊர்தி அல்லது பிற எந்தவொரு பொருட்களையும் ஆணையம் கைப்பற்றுகை செய்யலாம்.

(c) அவ்வாறு கைப்பற்றுகை செய்யப்பட்ட பொருள், தளவாடங்கள், சாரக்கட்டு, ஊர்தி அல்லது பிற பொருள் எதுவும், ஆணையத்தால் பறிமுதல் செய்யப்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படலாம். மேலும் அந்த விற்பனைத் தொகை நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட பொருள், தளவாடங்கள், சாரக்கட்டு, ஊர்தி அல்லது பிற பொருள் எதன்மீதும், அதன் விற்பனைத் தொகையின் மீதும், உரிமையாளரோ அல்லது பிற நபர் எவருமோ, எந்தவொரு கோருரிமையையும் கோர இயலாது:

வரம்புரையாக: இந்தக் கூறின்கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதற்கு முன்பு, அத்தகைய சொத்தை ஏன் விற்பனை செய்யக்கூடாது என்பது குறித்து காரணம் காட்டுவதற்கு, அந்தச் சொத்தின் உரிமையாளருக்கு ஆணையமானது, நியாயமான வாய்ப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) 39 ஆம் பிரிவின் (a) முதல் (d) வரையிலான கூறுகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, அங்கீகரிக்கப்படாத எந்தவொரு வளர்ச்சிப் பணி மேற்கொள்ளப்படுமிடத்து, இந்தச் சட்டத்தின்கீழ் வேண்டுறுத்தப்படுகிறவாறான ஆணையத்திடமிருந்து திட்டமிடல் அனுமதியானது பெறப்படும் வரை, ஆணையம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வளாகங்களைப் பூட்டி, முத்திரையிடுவதன் மூலம், வளர்ச்சிப் பணியை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

(5) உரிமையாளரோ அல்லது வளர்ச்சிப் பணியை மேற்கொள்ளும் நபரோ, (1)ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள், அதிலுள்ள தேவைகளுக்கு இணங்கவில்லையெனில், அந்த அறிவிப்பிற்கு இணங்கி நடக்காததற்காக, ஆணையமானது உரிமையாளர் மீது வழக்குத் தொடரலாம்.

(6) (1) அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிக்கைக்கு இணங்காமல் 39 ஆம் பிரிவின் (a) முதல் (d) வரையிலான கூறுகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, அங்கீகரிக்கப்படாத வளர்ச்சிப் பணிகள் நிறுத்தப்பட்டிருப்பின், 40 ஆம் பிரிவின் (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகள் பொருந்துதல் வேண்டும்.

பூட்டி, முத்திரை வைப்பதற்கு எதிரான மேல்முறையீடு.

42. (1) நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் இயக்குநரானவர், உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செய்யும் விண்ணப்பத்தின் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும், முறையிலும், 40 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் மற்றும் 41 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் வளாகத்தைப் பூட்டி, முத்திரை வைத்தது தொடர்பாக ஆணையத்தின் பதிவுருக்களை வரவழைத்து ஆய்வு செய்யலாம். அந்த நடவடிக்கை அல்லது முடிவு, திருத்தப்பட, இரத்து செய்யப்பட அல்லது மறுபரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டுமென்று இயக்குநருக்குத் தோன்றினால், அதற்கிணங்க அவர் ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

வரம்புரையாக, இந்த பிரிவின் கீழ் இயக்குநரிடம் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், பூட்டி, முத்திரை வைக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) எந்தவொரு நபருக்கும் பாதகமான எந்தவொரு ஆணையும், அந்த நபருக்குத் தனது விளக்கத்தைச் சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்படாமல், (1)ஆம் உட்பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படக்கூடாது.

ஏற்பட்ட செலவுகளை வசூலித்தல்.

43. கட்டணங்கள், வரிகள், மேல் வரி, சுங்கக் கட்டணம் அல்லது நிலங்கள், கட்டடங்கள் அல்லது வேறு ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துகளை விற்பனை செய்ததன் பேரில் அல்லது வாடகைகள் மற்றும் இலாபங்கள் மூலமாக, எந்தவொரு நபரிடமிருந்தும் தனக்குச் சேர வேண்டியதாக ஆணையத்தால் சான்றளிக்கப்பட்ட எந்தவொரு தொகையையும், அத்தகைய நபரிடமிருந்து அல்லது அத்தகைய நிலங்கள், கட்டடங்கள் அல்லது வேறு ஏதேனும் சொத்துகளில் அவரது வழியுரிமையாளரிடமிருந்து, நில வருவாய் நிலுவையை வசூலிப்பது போல ஆணையம் வசூலித்தல் வேண்டும்.

சிறப்பு வசதியை வழங்குவதற்கான அல்லது மேம்பாட்டுப் பணிகளை மேற் கொள்வதற்கான ஆணையத்தின் அதிகாரம்.

44. (1) திட்ட அனுமதியின்படி வழங்கப்பட வேண்டிய எந்தவொரு சிறப்பு வசதியும் வழங்கப்படவில்லை என்றோ அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த எந்தவொரு சட்டத்தின் கீழும் அனுமதி பெறப்பட்ட நிலம் அல்லது கட்டடத்தின் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றோ, ஆணையமானது மனநிறைவு அடைந்தால், அந்த நிலத்தின் உரிமையாளருக்கோ அல்லது சிறப்பு வசதியை வழங்கும் அல்லது சிறப்பு வசதியை வழங்குவதற்குப் பொறுப்பான நபருக்கோ காரணம் காட்ட நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பிறகு, ஆணை ஒன்றின் மூலம், அந்த சிறப்புவசதியை வழங்குமாறு அல்லது அந்த மேம்பாட்டுப் பணிகளை அந்த ஆணையில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மேற்கொள்ளுமாறு அவரைக் கோரலாம்.

(2) ஆணையில், குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் சிறப்பு வசதி எதுவும் வழங்கப்படாவிட்டாலோ அல்லது அத்தகைய மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்படாவிட்டாலோ, ஆணையமே, அந்த சிறப்பு வசதியை வழங்கலாம் அல்லது மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ளலாம் அல்லது அது பொருத்தமெனக் கருதும் அத்தகைய முகமையின் மூலம் அதை வழங்கச் செய்யலாம் அல்லது மேற்கொள்ளச் செய்யலாம்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவின்கீழ் எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதற்கு முன்பு, அந்த நிலத்தின் உரிமையாளருக்கோ அல்லது அந்த சிறப்பு வசதியை வழங்கும் அல்லது வழங்குவதற்குப் பொறுப்பான நபருக்கோ, அத்தகைய நடவடிக்கை ஏன் எடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தை கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை ஆணையம் வழங்க வேண்டும்.

(3) அந்த சிறப்பு வசதியை வழங்குவதிலோ அல்லது மேம்பாட்டுப் பணியை மேற்கொள்வதிலோ, ஆணையம் அல்லது அதனால் பணியமர்த்தப்பட்ட முகமையால் செய்யப்பட்ட அனைத்துச் செலவுகளையும், அந்த நிலத்தின் உரிமையாளரிடமிருந்தோ அல்லது அந்த சிறப்பு வசதியை வழங்கும் அல்லது வழங்குவதற்குப் பொறுப்பான நபரிடமிருந்தோ அரசு ஆணையின் மூலம் குறிப்பிடும் வட்டி விகிதத்தில் அந்தச் செலவுகளுக்கான கோரிக்கை விடுக்கப்பட்ட நாளிலிருந்து பணம் செலுத்தும் தேதி வரையிலான காலத்திற்கு, அத்தகைய வட்டி விகிதத்துடன் சேர்த்து, நில வருவாய் நிலுவையைப் போல, ஆணையம் வசூலிக்கலாம்.

சிறப்பு மேம்பாட்டுக் கட்டணம்.

45. எந்தவொரு சிறப்பு மேம்பாட்டுப் பகுதியிலும், ஆணையத்தால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் ஒரு மேம்பாட்டுத் திட்டத்தின் விளைவாக, அந்த மேம்பாட்டினால் பயனடைந்த மற்றும் அப்பகுதியில் உள்ள எந்தவொரு சொத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது அல்லது உயரக்கூடும் என்று ஆணையம் கருதுமிடத்து, அந்த மேம்பாட்டை நிறைவேற்றியதன் விளைவாக ஏற்பட்ட சொத்து மதிப்பு உயர்வுக்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும், விகிதத்திலும் அந்தச் சொத்தின் உரிமையாளர் மீதோ அல்லது அதில் உரிமை கொண்ட வேறு எந்த நபரின் மீதோ, சிறப்பு மேம்பாட்டுக் கட்டணத்தை விதிக்க அந்த ஆணையத்திற்கு உரிமை உண்டு:

வரம்புரையாக, மாநில அரசு எதற்கும் அல்லது மைய அரசுக்குச் சொந்தமான நிலங்கள் மீது மேம்பாட்டுக் கட்டணம் விதிக்கப்படுதல் கூடாது:

மேலும் வரம்புரையாக, அரசிற்குச் சொந்தமான எந்தவொரு நிலமும் அரசால் குத்தகை அல்லது உரிமத்தின் மூலம் எந்தவொரு நபருக்கும் வழங்கப்பட்டிருக்குமிடத்து, அந்த நிலமும் அதில் அமைந்துள்ள எந்தவொரு கட்டடமும், இந்த பிரிவின் கீழ் மேம்பாட்டுக் கட்டணத்திற்கு உட்பட்டதாக இருக்கும்.

சிறப்பு மேம்பாட்டுக் கட்டணங்களைத் தாமதமாகச் செலுத்துவதற்கான அபராத வட்டி.

**46.** (1) ஆணையமானது, எழுத்து வடிவிலான அறிவிப்பு ஒன்றின் மூலம், சிறப்பு மேம்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டிய ஒரு தேதியை நிர்ணயித்தல் வேண்டும். ஏதேனும் தொகை செலுத்தப்படாமல் நிலுவையில் இருக்குமிடத்து, நிலுவையில் உள்ள தேதி முதல், அத்தொகைக்கு பாரத ஸ்டேட் வங்கியின் மிக உயர்ந்த விளிம்புநிலை கடன் வழங்கும் விகிதத்துடன் இரண்டு விழுக்காடு சேர்த்து, அந்த விகிதத்தில் ஆணையம் வட்டி விதிக்கும். அத்தகைய நிலுவையில் உள்ள தொகையை, ஆணையம் தீர்மானிக்கலாகும் அத்தகைய எண்ணிக்கையிலான தவணைகளில் செலுத்தலாம்.

(2) சொத்தின் உரிமையாளரிடமிருந்தோ அல்லது அவரது வழியுரிமையாளரிடமிருந்தோ அல்லது அதில் உரிமைகொண்டுள்ள நபரிடமிருந்தோ அவை வசூலிக்கப்படும் தேதி வரையிலான வட்டியுடன் சேர்த்து, சிறப்பு மேம்பாட்டுக் கட்டணங்கள், நில வருவாய் நிலுவைப் போல, ஆணையத்தால் வசூலிக்கப்படும்.

## அத்தியாயம் VII.

## குற்றங்களும் தண்டத்தொகைகளும்.

குற்றங்களுக்கான தண்டனை.

47. (*a*) கூறப்பட்ட 39 ஆம் பிரிவின் (*a*) முதல் (*d*) வரையிலான கூறுகளில் விவரிக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்படாத மேம்பாடு ஏதேனும் ஒன்றை மேற்கொண்டதற்காக அல்லது மேற்கொண்டு வருவதற்காக, 49 ஆம் பிரிவு அல்லது 50 ஆம் பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்ட பிறகும், கூறப்பட்ட 39 ஆம் பிரிவின் (*a*) முதல் (*d*) வரையிலான கூறுகளில் விவரிக்கப்பட்டவாறு அதே நிலத்தில் அல்லது கட்டிடத்தில் மேலும் அங்கீகரிக்கப்படாத வளர்ச்சியை மேற்கொள்கிற அல்லது வேறு ஏதேனும் நிலம் அல்லது கட்டடத்தில் வளர்ச்சியை மேற்கொள்கிற; அல்லது

(*b*) 40 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிக்கையின் தேவைக்கு இணங்கத் தவறுகிற அல்லது, அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அல்லது அனுமதிக்கான விண்ணப்பம் முடிக்கப்பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட பின்னர் அத்தகைய காலத்திற்குள் இணங்கி நடக்கத் தவறுகிற; அல்லது

(*c*) 41 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அல்லது அனுமதிக்கான விண்ணப்பத்தை முடிக்க அல்லது திரும்பப் பெற்ற பிறகு அத்தகைய காலத்திற்குள் அதில் உள்ள தேவைகளைப் பின்பற்றத் தவறுகிற,

நபரெவரும்,—

குற்றம் நிரூபிக்கப்பட்டால், மூன்று ஆண்டு வரை நீட்டிக்கக்கூடிய இரண்டு வகையான சிறைத்தண்டனையில் ஏதனும் ஒன்று அல்லது ஐந்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படுவார்.

விளக்கம்.— இந்தப் பிரிவு மற்றும் 48 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, ''எவராயினும்'' என்பதற்கு நில உரிமையாளர், பகர அதிகாரம் கொண்டிருப்பவர், கட்டுபவர், மேம்படுத்துநர், குடியிருப்பாளர் கட்டடக் கலைஞர் மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர், ஆகியோரை, கூட்டாகவும் தனித்தனியாகவும் உள்ளடக்கும்.

**48.** இந்தச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதி, அல்லது ஒழுங்குமுறைவிதியின் வகைமுறைகள் எதனையும் மீறுகிற எவரும், 47 ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களைத் தவிர, ஐந்து லட்சம் ரூபாய் வரை நீடிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும். மேலும், மீறுகை தொடர்கின்ற நேர்வில், 40 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மற்றும் 41 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உள்ள மீறுகைகளைத் தவிர, தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்னரும், அத்தகைய மீறுகை தொடரும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும். சட்டத்தின் வகைமுறைகளை மீறியதற்கான தண்டத்தொகை.

**49.** (1) அரசானது, இந்தச் சட்டத்தின்கீழ் மீறுகைகளைத் தீர்க்கும் மற்றும் தண்டத்தொகைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கையின் மூலம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், விசாரணையை நடத்தவும் தண்டத்தொகையை விதிக்கவும், அலுவலர் ஒருவரைத் தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமனம் செய்யலாம்: தீர்ப்பளித்தல்.

வரம்புரையாக, அரசானது, தேவைப்படலாகிறவாறு, பல தீர்ப்பளிக்கும் அலுவலர்களை நியமனம் செய்யலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலரின் கருத்தில், விசாரணையின் பொருட்கூறுகளுக்குப் பயனுள்ளதாக அல்லது அதற்கு தொடர்புடையதாக இருக்கும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்குமாறு அல்லது சாட்சியம் அளிக்க அல்லது வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த நபரெவரையும், தீர்ப்பளிக்கும் அலுவலர், அழைப்பாணை விடுத்து, வருகை தருமாறு கட்டாயப்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில், தொடர்புடைய நபர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் மீறியுள்ளாரென அவர் மனநிறைவடைந்தாரெனில், அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, அத்தகைய தண்டத்தொகை எதுவும், விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல் விதிக்கப்படுதலாகாது.

50. (1) 49 ஆம் பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், ***தமிழ்நாடு அரசிதழில்*** அரசால் அறிவிக்கை செய்யப்படலாகிற மேல்முறையீட்டு அலுவலரிடம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேல்முறையீடு செய்யலாம்: மேல்முறையீடு.

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர், அந்தக் காலஅளவிற்குள் மேல்முறையீடு செய்யாமலிருப்பதற்குப் போதிய காரணம் இருந்திருக்கிறது என மேல்முறையீட்டு அலுவலரை மனநிறைவடையச் செய்தால், அறுபது நாட்கள் காலஅளவு கழிவுற்ற பின்பும் மேல்முறையீடானது ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(2) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீட்டின் தரப்பினருக்கு விளக்கமளிப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதனை முடித்து வைத்தல் வேண்டும்.

வசூலித்தல்.

**51.** நேர்விற்கேற்ப, 49 ஆம் பிரிவு அல்லது 50 ஆம் பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் அலுவல் அல்லது மேல்முறையீட்டு அலுவலரால் விதிக்கப்பட்ட தண்டத்தொகையானது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படவில்லையெனில், செலுத்தவேண்டிய தொகையானது, நிலவருவாயின் நிலுவைத் தொகையை வசூலிப்பது போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும்.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.

**52.** (1) இச்சட்டத்தின் கீழ் குற்றமொன்று நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அக்குற்றம் இழைக்கப்பட்டபோது, அந்நிறுமத்தின் அலுவல் நடைபெறுவதற்கு அந்நிறுமத்தின் பொறுப்பிலிருந்த மற்றும் பொறுப்பைக்கொண்டிருந்த ஒவ்வொருவரும், மற்றும் அந்நிறுமமும், அக்குற்றத்தை செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படுதலும் வேண்டும்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும், அக்குற்றம் தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருப்பதாக அல்லது அத்தகைய குற்றத்தை தடுக்க தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ததாக மெய்ப்பித்தால், இச்சட்டத்தின் கீழ் வகைசெய்யப்பட்டுள்ள எந்தவிதமான தண்டனையும் அத்தகைய நபருக்கு அளிக்கப்படுதல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் குற்றம் எதுவும் நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்தக் குற்றமானது, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் அனுமதியுடன் அல்லது உடந்தையுடன் அல்லது அவருடைய கவனமின்மை காரணமாக செய்யப்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால், அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர், அல்லது பிற அலுவலர் அக்குற்றத்தைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

(a) “நிறுமம்” என்பது, ஒரு கூட்டு நிறுவனம் என்று பொருள்படும் மற்றும் ஒரு நிறுவகம் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

(b) “இயக்குநர்” என்பவர், ஒரு நிறுவகத்தைப் பொறுத்தவரையில், நிறுவகத்தில் ஒரு பங்குதாரர் ஆவார்.

நிறுமங்களால் செய்யப்படும் மீறுகைகள்.

**53.** இச்சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகள் எதனையும், ஒரு நிறுமம் மீறுகை செய்கிறவிடத்து, 52 ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளானது, தகுந்த மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்.

குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

**54.** இந்தச் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய எந்தக் குற்றத்தையும், எந்த நீதிமன்றமும் இதற்காக ஆணையத்தால் அதிகாரமளிக்கப்படக்கூடிய ஓர் அலுவலரால் எழுத்துப்பூர்வமாக புகார் அளிக்கப்பட்டாலன்றி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது, மற்றும் நீதித்துறை நடுவர் படிநிலைக்குக் கீழான எந்த நீதிமன்றமும் அத்தகைய குற்றத்தை விசாரிக்கக்கூடாது.

## அத்தியாயம் VIII.

## நிதி, கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை.

55. (1) ஒவ்வொரு ஆணையமும் அதன் சொந்த நிதியை அமைத்துருவாக்க மற்றும் அதனை பராமரித்தல் வேண்டும், அதில் பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும்: ஆணையத்தின் நிதியம்.

(a) மாநில அரசு அல்லது மைய அரசிடமிருந்து மானியங்கள், கடன்கள், முன்பணம் அல்லது வேறு விதமாக ஆணையம் பெறும் அனைத்து பணங்களும்;

(b) மாநில அரசு அல்லது மைய அரசு அல்லாத பிற ஆதாரங்களில் இருந்து கடன்கள் அல்லது கடன் பத்திரங்கள் மூலம் ஆணையத்தால் கடன் வாங்கப்பட்ட அனைத்துப் பணங்களும்;

(c) இச்சட்டத்தின் கீழ் ஆணையத்தால் பெறப்பட்ட அனைத்து கட்டணங்கள், சுங்கம், மேல்வரி, கட்டணங்கள், அபராதங்கள் மற்றும் போன்றவை;

(d) அசையும் அல்லது அசையா நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை அகற்றுவதன் மூலம் ஆணையத்தால் பெறப்பட்ட அனைத்து பணங்களும்; மற்றும்

(e) வாடகை, இலாபம் அல்லது வேறு ஏதேனும் மூலத்திலிருந்து ஆணையத்தால் பெறப்பட்ட அனைத்து பணங்களும்.

(2) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் நோக்கங்களுக்காக, ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளும், மேற்சொன்ன நிதியத்திலிருந்து ஈடுசெய்யப்படுதல் வேண்டும்.

56. (1) அரசானது, இந்தச் சட்டத்தின்கீழ் ஆணையத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, அவை தேவையெனக் கருதும் அத்தகைய மானியங்கள், முன்தொகைகள் மற்றும் கடன்களை, அவர்கள் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் ஆணையத்திற்கு வழங்கலாம். மானியங்கள், முன்தொகைகள், கடன்கள் மற்றும் முதலீடுகள்.

(2) ஆணையமானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அரசின் முன் அனுமதியோடு, அவ்வப்போது தேவைப்படும் எந்தவொரு தொகையையும், பொது மக்களிடமிருந்தோ அல்லது எந்தவொரு மாநில அரசு அல்லது மைய அரசு சொந்தமாக அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள எந்தவொரு கூட்டுருமத்திடமிருந்தோ, வங்கிகள், நிதி நிறுவனங்கள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள், பன்னாட்டு பல்நோக்கு முகமைகள், சமூக அமைப்புகள், பொறுப்புக்கட்டளைகள் அல்லது நிறுவனங்களிடமிருந்தோ கடனாகப் பெறலாம்; மேலும் அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிதிகளை நேரடியாகவோ அல்லது பிற முகமைகளின் மூலமாகவோ வழிப்படுத்தி, பயன்படுத்திக் கொள்ளலாம்.

(3) ஆணையமானது, அதன் செலவினங்களைப் பூர்த்தி செய்த பின்பு, அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள், நிதி நிறுவனங்கள் அல்லது பிற கடனீட்டு ஆவணங்களில், மீதமான நிதியை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் முதலீடு செய்யலாம்.

57. (1) ஆணையமானது, அடுத்த நிதியாண்டைப் பொறுத்த மதிப்பீட்டிற்கான வரவுகளும் செலவுகளும் உள்ள வரவு செலவுத் திட்டத்தினை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவிலும், காலத்திற்குள்ளும் தயாரித்து, அதை அரசுக்கு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நேரத்திற்குள் அனுப்புதல் வேண்டும். ஆணையத்தின் வரவு செலவுத் திட்டம்.

(2) அந்த அறிக்கைக்கு, அடுத்த நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் செயல்பாடுகள், திட்டங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட திட்ட நடவடிக்கைகளை ஒரு விளக்கக் குறிப்பின் மூலம் இணைக்கப்படுதல் வேண்டும்.

செலவினங்களை மேற்கொள்வதற்கு ஆணையத்தின் அதிகாரம்.

**58.** ஆணையமானது, வரவுசெலவுத் திட்ட வகைமுறைகள் மற்றும் நிதி இருப்பிற்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் எந்தவொரு நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்காக எந்தவொரு தனிப்பட்ட பணி அல்லது செயல் திட்டம் அல்லது வேறு எந்தச் செலவினத்திற்கும் செலவு செய்யலாம்.

வரம்புரையாக, ஆணையமானது, அரசின் முன் அனுமதியின்றி, நூறு கோடி ரூபாய்க்கு அதிகமான அத்தகைய செலவினங்களை மேற்கொள்ளுதல் கூடாது.

கணக்குகளும் தணிக்கையும்.

**59.** (1) ஆணையமானது, 2013 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் கீழ் நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய இரட்டைப் பதிவு புத்தக பராமரிப்பு முறையில் கணக்குகளை பராமரிக்க வேண்டும். மையச் சட்டம் 18/2013

(2) ஆணையத்தின் கணக்குகளானது, இதன்பொருட்டு அரசால் நியமிக்கப்படலாகும் அத்தகைய வரவு செலவுத் தணிக்கையரால் ஆண்டிற்கு குறைந்தது ஒரு முறையாவது வரவு செலவு தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வரவு செலவுத் தணிக்கையாளர், வரவு செலவு தணிக்கை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணையத்தின் உறுப்பினர் – செயலாளர், வரவு செலவு தணிக்கை அறிக்கையை அச்சிடச் செய்தும் அதன் அச்சிடப்பட்ட பிரதியை ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்புதல் வேண்டும்; மேலும் அத்தகைய அறிக்கை ஆணையத்தின் அடுத்துவரும் கூட்டத்தில் பரிசீலனைக்காக வைக்கப்படுதல் வேண்டும்.

(5) ஆணையமானது, வரவு செலவு தணிக்கை அறிக்கையில், சுட்டிக்காட்டப்படக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது ஒழுங்கின்மையினை சரி செய்வதற்கு, உடனடியாக தகுந்த நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(6) வரவு செலவு தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட ஆணையத்தின் கணக்குகள், வரவு செலவு தணிக்கை அறிக்கையுடன், அதன் மீதான ஆணையத்தின் குறிப்புரைகளுடன் சேர்த்து, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் அரசிற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(7) வரவு செலவு தணிக்கை அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள், ஏதேனும் இருப்பின், அதில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய காலத்திற்குள், சரிசெய்வதற்கான ஆணையில் குறித்திடலாகும் அத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு அரசானது ஓர் ஆணையின் மூலம் ஆணையத்திற்கு பணிப்புரை வழங்கலாம்; மேலும் ஆணையமானது அத்தகைய பணிப்புரைக்கு இணங்குதல் வேண்டும்.

60. ஆணையமானது, ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிற்கு பின்பும், கூடிய விரைவில், அதன் முந்தைய ஆண்டில் அதன் செயல்பாடுகள் குறித்த விவரங்களைக் கொண்ட ஓர் அறிக்கையைத் தயாரித்து, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவில் மற்றும் அத்தகைய தேதிக்கு முன்பு, அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்; மேலும், அவ்வறிக்கையானது அடுத்த நிதியாண்டில் ஆணையத்தால் மேற்கொள்ளப்படவிருக்கும் செயல்பாடுகள் ஏதேனுமிருப்பின், அந்தச் செயல்பாடுகளின் விவரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆண்டறிக்கை.

## அத்தியாயம் IX.

## பல்வகைப்பட்டவை.

61. (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, 72 ஆம் பிரிவின்படி விதிகளைச் செய்வதற்கான அதிகாரத்தைத் தவிர, இந்தச் சட்டத்தால் அல்லது சட்டத்தின்படி அவற்றால் செயல்படுத்தக்கூடிய, அனைத்து அல்லது எந்தவொரு அதிகாரத்தையும் அலுவலர் எவருக்கும் அல்லது ஆணையத்தின் சார்நிலையில் உள்ள நபர் எவருக்கும் ஒப்படைவு செய்யலாம். அதிகாரங்களின் ஒப்படைவு.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு அல்லது அரசால் ஒரு பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம் விதிக்கப்படலாகும் அத்தகைய வரையறைகளுக்கு உட்பட்டு, ஆணையமானது, ஓர் எழுத்துப்பூர்வ ஆணையின் மூலம், 73 ஆம் பிரிவின்படி ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கான அதிகாரத்தைத் தவிர, நேர்விற்கேற்ப, இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகளின்கீழ், ஆணையத்தால் அல்லது தலைவரால் செயல்படுத்தப்படக்கூடிய அனைத்து அல்லது எந்தவொரு அதிகாரத்தையும், ஆணையத்தின் சார்நிலையில் உள்ள எந்தவொரு அலுவலருக்கும் ஒப்படைவு செய்யலாம்.

62. (1) இந்தச் சட்டத்தின் திறன்மிகு நிருவாகத்திற்காக, அரசால் அவ்வப்போது தனக்கு அளிக்கப்படும் பணிப்புரைகளை ஆணையம் மேற்கொள்ளுதல் வேண்டும். அரசின் கட்டுபாடு.

(2) இந்தச் சட்டத்தின் கீழ் ஆணையம் தனது அதிகாரங்களை செயற்படுத்துவதிலும் செயற்பணிகளை ஆற்றுவதிலும், அல்லது அது தொடர்பாகவும், ஆணையத்திற்கும் அரசுக்கும் இடையே ஏதேனும் பூசல்கள் ஏற்பட்டால், அத்தகைய பூசல் குறித்த அரசின் முடிவே இறுதியானதாகும்.

(3) அரசு, எந்த நேரத்திலும், தன்னியக்கமாகவோ அல்லது இது தொடர்பாக தங்களுக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரிலோ, இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு அதிகாரத்தையும் நிறைவேற்றுவதற்காக ஆணையம் அல்லது அதனால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் எவராலும் முடித்துவைக்கப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் பதிவேடுகளைக் கோரிப் பெறலாம். மேலும் தங்களுக்குப் பொருத்தமானதெனக் கருதுகிற ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

வரம்புரையாக: அரசு, நபர் எவருக்கும் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றை வழங்காமல், அவருக்குச் சாதகமற்ற ஆணை எதையும் பிறப்பித்தல்கூடாது.

(4) இந்தப் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செயல்படுத்தி அரசு வெளியிடும் ஆணை ஒவ்வொன்றும் இறுதியானது.

உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள், பொதுப் பணியாளர்களாகக் கருதப்படுதல்.

**63.** இச்சட்டம் நடைமுறையில் செயல்படும் போது அல்லது செயல்படுவதாகக் கருதப்படும் போது, ஆணையத்தின் ஒவ்வொரு உறுப்பினர், அலுவலர் மற்றும் பணியாளர், 2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் 2 ஆம் பிரிவின் (28) ஆம் கூறின் பொருளின்படி பொதுப் பணியாளராகக் கருதப்படுதல் வேண்டும். மையச் சட்டம் 45/2023.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு

**64.** இந்தச் சட்டத்தின்படி அல்லது இதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின்படி அல்லது ஒழுங்குமுறை விதிகளின்படி அதிகாரங்களைச் செயற்படுத்துவதிலும் செயற்பணிகளை ஆற்றுவதிலும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், ஆணையத்தின், உறுப்பினர்கள், அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் எவருக்கும் எதிராகவும், உரிமையியல் வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் கூடாது.

விளக்க அறிக்கைகள் மற்றும் ஆய்வுகள்

**65.** (1) ஆணையமானது, அரசால் அவ்வப்போது கோரப்படலாகிறவாறு, அத்தகைய அறிக்கைகள், விளக்கஅறிக்கைகள் மற்றும் பிற தகவல்களை அரசுக்கு அறிக்கை அளித்தல் வேண்டும்.

(2) அரசானது, அறிக்கைகள், விளக்கஅறிக்கைகள் மற்றும் பிற தகவல்கள் குறித்து அது தகுந்ததெனக் கருதும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம், மேலும் அத்தகைய பணிப்புரைகளைச் செயல்படுத்துவது ஆணையத்தின் கடமையாக இருத்தல் வேண்டும்.

நுழைவிற்கான அதிகாரம்.

**66.** ஆணையமானது, நபர் எவரையும், பிற நபரின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ, நிலம் அல்லது கட்டிடம் எதிலுமோ அல்லது எதன்மீதும் நுழைவதற்கு பின்வரும் நோக்கங்களுக்கு ஏற்ப அங்கீகரிக்கலாம்,—

(a) அத்தகைய நிலம் அல்லது கட்டிடம் தொடர்பாக எந்தவொரு விசாரணை, ஆய்வு, அளவீடு அல்லது கணக்கெடுப்பு நடத்துதல் அல்லது அதன் மட்டங்களை எடுத்தல்;

(b) கட்டுமானப் பணிகளில் உள்ள பணிகளை ஆய்வு செய்தல் மற்றும் கழிவுநீர்அகற்றுதல் மற்றும் வடிகால்களின் பாதையை உறுதி செய்தல்;

(c) நிலத்தடி மண்ணிற்குள் தோண்டுவது அல்லது துளையிடுவது;

(d) எல்லைகளையும் உட்கிடை பணி வரம்புகளையும் வரையறுத்தல்;

(e) குறியீடுகளையும் அகழிகளையும் வெட்டுவதன் மூலம் அத்தகைய நிலைகள், எல்லைகள் மற்றும் கோடுகளை நிலங்களில் உருவாக்குதல்;

(f) எந்தவொரு திட்டத்திற்கும் எதிராக அல்லது அத்தகைய அனுமதி வழங்கப்பட்டதற்கு உட்பட்ட நிபந்தனைகள் எதற்கும் முரணாக எந்தவொரு நிலமும் மேம்படுத்தப்படுகிறதா அல்லது மேம்படுத்தப்பட்டதா என்பதைக் கண்டறிதல்; அல்லது

(g) இந்தச் சட்டத்தின் திறன்மிகு நிருவாகத்திற்குத் தேவையான பிற செயல் எதையும் செய்தல்:

வரம்புரையாக, சூரிய உதயத்திற்குப் பிறகு மற்றும் சூரிய மறைவிற்கு இடைப்பட்ட நேரங்கள் தவிர, குடியிருப்பாளர் அல்லது குடியிருப்பாளர் இல்லாத நேரங்களில் நிலம் அல்லது கட்டிடத்தின் உரிமையாளருக்கு முன்னறிவிப்பின்றி அத்தகைய நுழைவு செய்யப்படுதல் கூடாது;

விளக்கம்.— இந்தப் பிரிவின் கீழ் நிலம் அல்லது கட்டிடம் எதிலுமோ அல்லது எதன்மீதும் நுழைவதற்கு அதிகாரம் பெற்ற நபர் ஒவ்வொருவரும், அத்தகைய ஆணையத்திற்கிணங்கியவாறு செயல்படும்போது, 2023 ஆம் ஆண்டு பாரதிய நியாய சன்ஹிதாவின் 2 ஆம் பிரிவில் (28) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு பொது ஊழியராகக் கருதப்படுவார்.

அறிவிப்பைச் சார்வுசெய்தல் முதலியன

67. இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகள் எதனின்படி, அறிவிப்பு, முன்வரைவு அல்லது பிற ஆவணம் எதுவும், எந்தவொரு நபருக்கும் அத்தகைய அறிவிப்பு, வரைவு அல்லது ஆவணத்தைச் சார்வு செய்யப்பட வேண்டும் அல்லது அளிக்கப்பட வேண்டும் அல்லது முன்னிடப்பட வேண்டும் எனக் கோரப்படும்போது, அத்தகைய சார்வு, அளித்தல் அல்லது முன்னிடுதல் என்பது,—

(a) அத்தகைய நபருக்கு அதை ஆவணத்தைக் கொடுத்தல் அல்லது வழங்குதல் மூலம்;

(b) அத்தகைய நபர் கிடைக்கவில்லை என்றால், அவர் கடைசியாக அறியப்பட்ட வசிப்பிடத்தில் அதை விட்டுச் செல்வதன் மூலமாகவோ, அல்லது அவரது குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஒரு உறுப்பினருக்கோ அல்லது பணியாளருக்கோ அதை அளிப்பதன் அல்லது வழங்குவதன் மூலம்;

(c) அதை அத்தகைய நபரின் வழக்கமான அவருடைய வசிப்பிடத்திற்கோ அல்லது அலுவலகத்திற்கோ விரைவு அஞ்சல் வழியாக அனுப்புதல் மூலம்; அல்லது

(d) அவரது வேறு இடத்தின் முகவரி தெரிந்திருந்தால், அதை அந்த முகவரிக்கு விரைவு அஞ்சல் வழியாக அனுப்புவதன் மூலம்; அல்லது

(e) மின்னணு முறை வாயிலாக; அல்லது

(f) மேற்கூறப்பட்ட சார்வு முறை எதுவும் சாத்தியமானதாக இல்லையெனில், அவற்றின் நகலொன்றை, அப்பொழுது அந்த ஆவணம் தொடர்புடைய கட்டிடம் அல்லது நிலம் எவையேனும் இருப்பின் அவற்றின் வெளிப்படையான பகுதியில் ஒட்டச் செய்வதன் மூலம்

நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

பொது அறிவிப்பு எவ்வாறு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பது.

68. இந்தச் சட்டம் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளின் கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு பொது அறிவிப்பும், பாதிக்கப்படவிருக்கும் பகுதிக்குள், அதன் நகல்களை அந்தப் பகுதியில் உள்ள கண்களுக்குப் புலப்படும் பொது இடங்களில் ஒட்டுவதன் மூலமும், அப்பகுதியில் முன்னணியில் உள்ள செய்தித்தாள்களில் குறைந்தது இரண்டில் ஏதாவது ஒன்று தமிழில் இருக்கக்கூடியவற்றில் விளம்பரப்படுத்துவதன் மூலமும், ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையவலை வாயிலில் வெளியிடுவதன் மூலமும், மேலும் ஆணையம் பொருத்தமானதெனக் கொள்ளப்படுகிற வேறு எந்த வழிகளிலும் பரவலாக அறிவிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு அறிவிப்பும் ஆணையத்தின் அலுவலக அறிவிப்புப் பலகையிலும் ஒட்டப்படுதல் வேண்டும்.

ஆணைகள் மற்றும் ஆவணங்கள் உறுதிச் சான்றளிக்—கப்படுதல்

69. ஆணையத்தின் அனைத்து அனுமதிகள், ஆணைகள், பணிப்புரைகள், முடிவுகள், அறிவிப்புகள் மற்றும் பிற ஆவணங்கள், அதிகாரஅமைப்பின் உறுப்பினர் செயலாளரது கையொப்பத்தால் அல்லது இதன்பொருட்டு ஆணையம் அதிகாரமளித்துள்ள ஏதேனும் பிற அலுவலரின் கையொப்பதால் உறுதிச் சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

ஆணையத்தைக் கலைத்தல்.

70. (1) அரசின் கருத்துரையின்படி இந்தச் சட்டத்தின்படி அமைப்பாக்கம் செய்யப்பட்டுள்ள எந்தவொரு ஆணையத்தின் தொடர்ச்சியான இருத்தல் தேவையற்றது அல்லது விரும்பத்தக்கதல்ல எனில், அரசு, அறிவிக்கையின் மூலம் அதில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய தேதியிலிருந்து அத்தகைய ஆணையம் கலைக்கப்படுதல் வேண்டும் என்று விளம்புகை செய்யலாம் மற்றும் அதற்கிணங்க அத்தகைய ஆணையம் கலைக்கப்படுதல் வேண்டும்.

(2) கலைத்தல் நாள் சொல்லப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும்,—

(a) ஆணையத்தில் உற்றமைந்துள்ள அல்லது அதனால் பெறத்தக்கதாக உள்ள அனைத்துச் சொத்துகள், நிதியங்கள் மற்றும் பாக்கிகள் அரசிடம் உற்றமைதல் வேண்டும் அல்லது அதனால் பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும்;

(b) ஆணையத்திற்கு எதிராக செயல்படுத்தத்தக்க அனைத்துக் கடப்பாடுகளும் அரசிற்கு எதிராகச் செயல்படுத்தப்படுதல் வேண்டும்;

(c) இந்தச் சட்டத்தின்படி அல்லது அவற்றின்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறைகளின்படி ஆணையத்தால் செயற்படுத்தப்படும் அல்லது ஆற்றப்படும் அனைத்து அதிகாரங்களும், செயற்பணிகளும், இதன்பொருட்டு அரசால் நியமனம் செய்யப்படலாகும் அல்லது பெயர் குறித்து அமர்த்தப்படலாகும் அத்தகைய நபரால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் செயற்படுத்தப்படுதல் அல்லது ஆற்றப்படுதல் வேண்டும்.

உரிமையியல் அதிகார வரம்பிற்குத் தடை.

71. 22 ஆம் பிரிவின்கீழ் சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டத்தின் ஒப்புதல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும், குறிப்பிடப்பட்ட பொருட்பாடுகள் தொடர்பாக எந்தவொரு உரிமையியல் நீதிமன்றமும், எந்தவொரு அதிகார வரம்பு, அதிகாரங்கள் அல்லது அதிகாரஉரிமையைக் கொண்டிருத்தல் கூடாது அல்லது அவற்றைச் செயல்படுத்துகிற உரிமையைக் கொண்டிருத்தல் கூடாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

72. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது எனச் சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

73. ஆணையமானது, அரசின் முன் அனுமதியுடன், அறிவிப்பின் மூலம் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத ஒழுங்குமுறைவிதிகளை, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதற்குப் பொதுவான ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

74. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில், இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரையாக, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் காலஅளவு கழிவுற்ற பின்னர், இந்தப் பிரிவின்கீழ் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

பிற சட்டங்களின் பொருந்துகை தடைப்படாது.

75. இச்சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள ஏதேனும் பிற சட்டங்களின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வரையில் அந்தச் சட்டங்களின் வகைமுறைகளுக்குக் கூடுதலாக இருக்குமேயன்றி, அவற்றை திறக்குறைவு செய்வதாக இருத்தல் கூடாது.

இந்தச் சட்டத்தின் மீதூர்ந்து இயங்கும் விளைவு

தமிழ்நாடு சட்ட எண் 35/1972.

76. 22 ஆம் பிரிவின்கீழ் சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டதின் பேரில், இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு பகுதியும் சிறப்பு மேம்பாட்டுப் பகுதியாக, விளம்புகை செய்யக்கூடிய தற்போதுள்ள உள்ளூர் திட்டமிடல் பகுதி, மண்டல திட்டமிடல் பகுதி, புதிய நகர மேம்பாட்டுப் பகுதி, நகர்புற திட்டமிடல் பகுதி, சென்னை பெருநகரத் திட்டமிடல் பகுதி மற்றும் 1971 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட தற்போது இருக்கின்ற மூலத்திட்டம் அல்லது மண்டலத் திட்டம் அல்லது புதிய நகர மேம்பாட்டுத் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து விலக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்; மேலும் அவ்வாறு இருப்பினும், குறித்துரைக்கப்பட்ட சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும், இந்தச் சட்டம் அனைத்து தேவையான நேரங்களிலும் செயல்விளைவில் இருந்தாற் போன்றே, இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கருதப்படுதல் வேண்டும்.

காப்புரை.

77. 22 ஆம் பிரிவின்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் வெளியிடப்பட்ட தேதி முதல், பின்வரும் விளைவுகள் விளைவுறுதல் வேண்டும்:—

(a) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் சட்டத்தின்படி உரிய திட்டமிடல் அதிகார அமைப்பால் (செய்யப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட எந்தவொரு பணியமர்த்தம், ஒப்படைவு, அறிவிக்கை, உத்தரவு அல்லது வழங்கப்பட்ட எந்தவொரு சான்றிதழ் அல்லது அனுமதி அல்லது ஒப்பளிப்பு உள்ளடங்களாக) செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும், இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எந்தவொரு செயல் அல்லது எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையாலும் நீக்கம் செய்யப்பட்டாலன்றி, இந்தச் சட்டத்தின்படியான ஆணையத்தால் புரியப்பட்டதாக அல்லது செய்யப்பட்டதாக, வெளியிடப்பட்டதாக அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்; தமிழ்நாடு சட்ட எண் 35/1972.

(b) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் உரிய திட்டமிடல் அதிகார அமைப்பால், அல்லது அதனுடன் அல்லது அதன் பொருட்டு ஏற்பட்ட அனைத்து கடன்கள், கடமைகள் மற்றும் கடப்பாடுகள், ஈடுபட்ட அனைத்து ஒப்பந்தங்கள் அல்லது செய்யப்படுவதற்குரிய அனைத்து பொருட்பாடுகள் மற்றும் பொருள்களானவை, ஆணையத்தால் அல்லது அதனுடன் அல்லது அதன் பொருட்டு உள்ளானதாக, ஏற்பட்டதாக அல்லது ஈடுபட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்,

(c) சிறப்பு மேம்பாட்டுப் பகுதியில் உரிய திட்டமிடல் அதிகாரஅமைப்பிடம் உற்றமைந்துள்ள அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் மற்றும் எந்தவொரு தன்மை மற்றும் வகையிலுமான அனைத்து நலன்களும், உரிய ஆணையத்தால் எந்தவொரு விவரிப்பின்படியும் பயன்படுத்தப்பட்டுள்ள, நுகரப்பட்டுள்ள அல்லது உடைமையாகக் கொள்ளப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும், ஆணையத்திடம் உற்றமைதல் வேண்டும்;

(d) உரிய திட்டமிடல் அதிகாரஅமைப்பிற்கு பாக்கியாகவுள்ள அனைத்து வாடகைகள், கட்டணங்கள் மற்றும் பிற பணத்தொகைகள், ஆணையத்திற்குக் கொடுபடவேண்டிய இருத்தல் வேண்டும்;

(e) உரிய அதிகார அமைப்பால், அல்லது அதற்காக அல்லது அதனை எதிர்த்து தொடுக்கப்பட்டுள்ள அல்லது தொடுக்கப்பட்டிருக்கக் கூடிய அனைத்து உரிமைமூல வழக்குகள், குற்ற வழக்குத் தொடர்வுகள் மற்றும் பிற சட்ட நடவடிக்கைகள், ஆணையத்தால், அல்லது அதற்காக அல்லது அதனை எதிர்த்து தொடுத்தல் அல்லது தொடுக்கப்படுதல் வேண்டும்.

## நோக்கக்காரண விளக்கவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாமல்லபுரம், கன்னியாகுமரி போன்ற முக்கிய சுற்றுலா மையங்களில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் பல்வேறு அரசுத் துறைகளுடன் இணைந்து பெருந் திட்டப்பணிகளை திறம்பட ஒருங்கிணைத்து செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்கும், ரூபாய் 300 கோடி முதலீடு செய்யப்படும் என்று 2026–2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வரவு செலவு திட்ட உரையில் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. தொடர்ந்து அதிகரித்துவரும் மக்கள்தொகை பெருக்கம், தொழில்மயமாக்கல், பெருமளவிலான உட்கட்டமைப்பு வளர்ச்சி, சுற்றுலாத்துறையின் நிலையான வளர்ச்சி ஆகியன, நமது நவீன நகரங்களைத் திட்டமிடுவதில் எதிர்கொள்ளப்படும் சவால்களாக உள்ளன. நிலமும் கட்டிடங்களும் திட்டமிடப்படாத மற்றும் சிதறிய முறையில் வளர்ச்சியடைவதால் நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளின் மீது சுமை ஏற்படுகிறது. பொது வசதிகளின் பற்றாக்குறை, சுற்றுச்சூழல் சீர்கேடு, சூழலியல் சமநிலையின் பாதிப்பு ஆகியன வாழத்தகுந்த மற்றும் சூழலமைப்பை மட்டுமல்லாமல், தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறை போன்ற துறைகளிலும் நிலையான வளர்ச்சியை எதிரிடையாக பாதித்துள்ளது. எனவே, இவ்வகையான வகையிலான சவால்களைத் திறம்பட கையாள்வதற்கு தனித்துவமான மேம்பாட்டு ஆணையங்களை நிறுவ வேண்டிய அவசியம் உள்ளது.

3. தற்போது தமிழ்நாடு மாநிலத்தில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற நிலங்களின் திட்டமிடல், மேம்பாடு மற்றும் பயன்பாட்டினை ஒழுங்குப்படுத்தும், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1972/35) வகைமுறைகளானவை, திட்டமிடல் பகுதிகளை அறிவிப்பதற்கும், அவற்றிற்கான திட்டமிடல் ஆணையங்களை அமைப்பதற்கும் வகைமுறைகளைக் கொண்டிருந்தாலும், வரலாறு, சூழலியல், தொல்லியல் அல்லது சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த குறித்தசில சிறப்புப் பகுதிகளின் மேம்பாட்டிற்கு அவை போதுமானவையாக இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் அல்லது பாரம்பரிய ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் அதிகாரவரம்புகடிள மீறாமல் இத்தகைய பகுதிகளின் திட்டமிட்ட மேம்பாட்டிற்கான ஒரு நிறுவன அடிப்படை கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஒரு சிறப்புச் சட்டத்தை இயற்றுவதென, அரசு முடிவு செய்துள்ளது.

4. அதற்கிணங்கியவாறு, முன்மொழியப்பட்ட சட்டத்தின்படி, எந்தவொரு பகுதியையும் சிறப்பு மேம்பாட்டுப் பகுதியாக அறிவிக்கை செய்வதற்கும் அந்தப் பகுதிக்கு ஒரு சிறப்பு மேம்பாட்டு ஆணையத்தை அமைத்துருவாக்கம் செய்வதற்குமான அதிகாரத்தை அரசுக்கு வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக வரலாற்று, சூழலியல் மற்றும் சுற்றுலா முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரி போன்ற பகுதிகளுக்கு சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட சட்டத்தின்படி அமைக்கப்படும் சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையமானது, அத்தகைய பகுதிகளின் விரிவான மற்றும் நிலையான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு, ஒரு சிறப்பு முதன்மைத் திட்டத்தைத் தயார் செய்யும். மேலும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, சிறப்புப் பகுதி முதன்மைத் திட்டம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொடர்புடைய சிறப்பு மேம்பாட்டுப் பகுதிக்கான திட்டமிடல் ஆணையமாக அத்தகைய ஆணையமே செயல்படுதல் வேண்டும்.

5. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இரா. இராஜேந்திரன்,**
*சுற்றுலாத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(3), 2(zi), 3, 4, 5, 7, 10, 14 (h), 15 (1), 16(1), 17(1), 17(2)(v), 18, 19, 20, 21, 22, 23(2)(zb), 24, 25, 26, 27, 28(3), 30 (1) (b), 32, 35 (1), 36, 37, 40, 41, 42, 44, 45, 49, 50, 51, 56, 57, 59, 60, 61, 70, 72, 73, மற்றும் 74 ஆம் பிரிவுகளானது, அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்காக, விதிகள், ஒழுங்குமுறைவிதிகளைச் செய்வதற்கு மற்றும் அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் பணிப்புரைகளை வெளியிடுவதற்கு, நேர்விற்கேற்ப, அரசுக்கு மற்றும் சிறப்பு பகுதி மேம்பாட்டு ஆணையத்திற்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**இரா. இராஜேந்திரன்,**
*சுற்றுலாத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 ஜனவரி 23.

**கி. சீனிவாசன்,**
*முதன்மைச் செயலாளர்.*

**2026—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130-ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/2026**

**2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இச்சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தம் மற்றும் செல்லுந்தன்மைச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) 2 ஆம் பிரிவானது, 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்பட வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் எஞ்சியுள்ள பிரிவுகள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 40/2010.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்

2. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படும்) 2 ஆம் பிரிவின் (a) கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(a) "நேரடி பணி நியமனம்" என்பது, அரசின் கீழ்வரும் எந்தவொரு பணியிலும் உள்ள ஒரு பதவிக்கு, நடைமுறையிலுள்ள விதிகள் அல்லது ஒழுங்குமுறைகள் அல்லது ஆணைகளுக்கு இணங்க, ஒரு பொதுப் போட்டித் தேர்வு, நேர்முகத்தேர்வு அல்லது இரண்டின் மூலமாக, ஒரு நபரை பணி நியமனம் செய்தல் எனப் பொருள்படும்; ஆனால் பணி மாறுதல் மூலம் பணி நியமனம் வாயிலாக செய்யப்படும் பணி நியமனம் இதில் உள்ளடங்காது."

விளக்கம்.— இந்தக் கூறின் நோக்கத்திற்காக "பணி மாறுதல் மூலம் பணி நியமனம்" என்பது, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/2016), 3 ஆம் பிரிவின் (s) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள, அதே பொருளைக் கொண்டிருக்கும்.

3 ஆம் பிரிவுக்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

“(1–A) அரசின் கீழுள்ள எந்தவொரு பணியிலும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒதுக்கப்பட்ட முன்னுரிமை காலிப்பணியிடங்களுக்கு, முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட ஒரு நபர், மிகை ஊதிய விகிதத்தைக் கொண்ட பதவியைத் தவிர, மீண்டும் அத்தகைய காலிப்பணியிடங்களுக்குப் போட்டியிட உரிமையற்றவராகிறார்:

வரம்புரையாக, ***தமிழ்நாடு அரசிதழில்*** 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தம் மற்றும் செல்லுந்தன்மைச்) சட்டம் வெளியிடப்படும் தேதிக்கு முன்னர் அறிவிக்கை செய்யப்பட்ட முன்னுரிமை காலிப்பணியிடங்களுக்கு இந்த உட்பிரிவு பொருந்தாது.”.

செல்லுந்தன்மை

4. முதன்மைச் சட்டம் அல்லது எந்தவொரு நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பின் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முன்னுரிமை காலிப் பணியிடங்களில் ஒதுக்கப்பட்டுள்ள அரசின் கீழுள்ள பணிகளில் ஏதேனும் ஒன்றில், ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிக்கை எதுவும் அல்லது ஏற்கனவே, அரசின் கீழ் பணியில் இருக்கும் நபர் ஒருவரின் அத்தகைய முன்னுரிமை காலிப் பணியிடங்களுக்கான எந்தவொரு நியமனமும், 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி தொடங்கி, ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதியுடன் முடிவடையும் காலகட்டத்தில், அத்தகைய அறிவிக்கையின் அடிப்படையில் செய்து முடிக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும், அனைத்து நோக்கங்களுக்காகவும், இந்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவால் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டமானது, அத்தகைய அறிவிக்கை வெளியிடப்பட்ட மற்றும் அத்தகைய நியமனம் செய்யப்பட்ட மற்றும் அத்தகைய செயல் செய்து முடிக்கப்பட்ட அல்லது நடவடிக்கை எடுக்கப்பட்ட, அனைத்து முக்கியமான நேரங்களிலும் நடைமுறையில் இருந்திருந்தால் எவ்வாறு கருதப்படுமோ, அதுபோலவே சட்டத்திற்கிணங்க எப்போதும் செல்லுந்தன்மையுடன் வெளியிடப்பட்டதாகவும், செய்யப்பட்டதாகவும், செய்து முடிக்கப்பட்டதாகவும் அல்லது எடுக்கப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

தமிழ்நாட்டில் அரசுப் பணிகளில் நேரடி பணி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டிய அனைத்து காலிப் பணியிடங்களிலும் 20 விழுக்காடு இடங்களைத் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்காக, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 40/2010) இயற்றப்பட்டது. இந்தச் சலுகையை, மாநில அரசின் கீழ் பணியில் இல்லாதவர்களுக்கு மட்டும் கட்டுப்படுத்தாமல், தமிழ் வழியில் படித்த அனைவருக்கும் விரிவுபடுத்துவதே அரசின் நோக்கமாகும். மேற்கண்ட நோக்கத்திற்கு இணங்க, ஒரு விண்ணப்பதாரர் ஏற்கனவே அரசுப் பணியில் உள்ளவரா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், இதுநாள் வரை அனைத்து நேரடி பணி நியமனங்களிலும் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசு முன்னுரிமை வழங்கி வருகிறது. இருப்பினும், சென்னை உயர் நீதிமன்றம், மேற்கண்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (a) கூறில் உள்ள "நேரடி பணி நியமனம்" என்ற சொல்லின் வரையறைக்கு சட்டப் பொருள் விளக்கம் அளித்து, ஏற்கனவே அரசுப் பணியில் உள்ளவர்கள் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் என்ற வகைப்பாட்டின் கீழ் முன்னுரிமை நியமனத்திற்குத் தகுதியற்றவர்கள் என்று தீர்ப்பளித்துள்ளது. எனவே, இந்த நோக்கத்தைத் தெளிவுபடுத்துவதற்காகவும், 2010ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி, அதாவது மேற்கண்ட சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து, ஆட்சேர்ப்பு முகமைகள் அல்லது நியமன அதிகாரிகளால் ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் செய்யப்பட்ட தேர்வுகள் அல்லது பணி நியமனங்கள் மற்றும் அத்தகைய பணி நியமனங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பிற நடவடிக்கைகளைச் செல்லுபடியாக்குவதற்காகவும், மேற்கண்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (a) கூறை மாற்றீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேலும், மேற்கூறிய முன்னுரிமையை ஏற்கனவே துய்த்து அரசுப் பணியில் நியமிக்கப்பட்ட நபர்கள், மிகை ஊதிய விகிதத்தைக் கொண்ட பதவிகளில் உள்ள அத்தகைய முன்னுரிமை காலிப் பணியிடங்களுக்கு மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்பட வேண்டும் என்று அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. எனவே, மேற்கூறிய நோக்கங்களை அடைவதற்காக, தமிழ்நாடு சட்டம் 40/2010—ஐப் பொருத்தமான முறையில் திருத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**என். கயல்விழி செல்வராஜ்,**
*மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2026 ஜனவரி 23.

**கி. சீனிவாசன்,**
*முதன்மைச் செயலாளர்.*

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/2026

**2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டிற்கு குறித்த சில பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தொகைக்கும் மிகையாக அந்த ஆண்டின்போது அந்தப் பணிகளுக்கும் நோக்கங்களுக்கும் செலவழிக்கப்பட்ட தொகையினை எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகையை ஒதுக்குவதற்கு அதிகாரமளிப்பதற்காக வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. 2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டிற்கு, இணைப்புப் பட்டியலில் (2)–ஆம் கலப்பத்தியில் குறித்துரைக்கப்பட்ட பணிகளையும், நோக்கங்களையும் பொறுத்த அளவில் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தொகைகளுக்கும் மிகையாக, அந்த ஆண்டின்போது அந்தப் பணிகளையும் நோக்கங்களையும், பொறுத்த செலவினங்களைச் செய்வதற்கு செலவிடப்பட்ட தொகையினை எதிர்கொள்வதற்காக, இணைப்புப் பட்டியலின் (5)–ஆம் கலப்பத்தியில் குறித்துரைக்கப்பட்ட தொகையான நாற்பத்து ஒன்பதாயிரத்து எண்ணூறு ரூபாயை மாநிலத் தொகுநிதியத்திலிருந்து வழங்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். 2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து 49,800/– ரூபாயை வழங்குதல்.

3. 2–ஆம் பிரிவின்படி மாநிலத் தொகுநிதியத்திலிருந்து வழங்கப்படுவதற்கும் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும் தொகையானது 2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பாக, இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். நிதி ஒதுக்கம்.

## இணைப்புப் பட்டியல்.

(2–ஆம் மற்றும் 3–ஆம் பிரிவுகளைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | ... | *49,800* | 49,800 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | | வருவாய் | ... | ***49,800*** | **49,800** |
| | **மொத்தம்** | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | **பெருமொத்தம்** | | ... | ***49,800*** | **49,800** |

### நோக்க–காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது –

(a) 2022–2023ஆம் நிதியாண்டின் போது குறித்த சில பணிகளுக்கும் நோக்கங்களுக்கும் செலவிடப்பட்ட தொகையை உள்ளடக்கும் பொருட்டு, அந்தப் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மற்றும் அந்த ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்டுள்ள தொகைக்கு மிகையாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்,

(b) அந்த ஆண்டின்போது மாநிலத் தொகுநிதியத்திலிருந்து கொடுக்கப்படுவதற்கு *சாட்டப்பட்ட* செலவினத்திற்கு மிகையாக அந்தப் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் செலவிடப்பட்ட தொகையையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205–ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின் (b) எனும் உட்கூறினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 ஜனவரி 23.

**கி. சீனிவாசன்,**
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.